இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 406
திங்கள், 31 ஆகஸ்ட், 2026 |
பக்கங்கள் 16
www.ilakku.org









# சுயாதீன நீதிப் பொறிமுறையையே கோருவதாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் தெரிவிப்பு



காணாமலாக்கப்பட்டோருக்கான நீதித்தேடலில் காணாமல் போனார் அலுவலகம் மட்டும் போதாது என்றும், சரியான நீதிப்பொறிமுறை ஒன்றையே தாங்கள் கோருவதாகவும், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி கனகரஞ்சனி யோகராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளினால் நேற்று (31) யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட சர்வதேச மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை கூறினார். இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் பல்வேறு ஆணைக்குழுக்களும் நிறுவனங்களும் உறுவாக்கப்பட்ட போதிலும் தங்களது உறவுகளின் அடிப்படை கோரிக்கை இதுவரையில் எந்த விதத்திலும் நிறைவேற்றவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு நிறுவனத்தின் சுயாதீன செய்தித்திறன் மீதே மக்கள் இன்று நம்பிக்கை இழந்துள்ளனர் என்றும் அந்த நம்பிக்கையை உருவாக்குவதற்கு சர்வதேச சுயாதீன பங்களிப்பு மிக அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார். இதன் பொருள் இலங்கைக்கு எதிரான பாதுகாப்பு மிக்க சுயாதீன சர்வதேச விசாரணை வேண்டும் என்பதே ஆகும் என்றும் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி கனகரஞ்சனி யோகராசா கூறியுள்ளார்.

## ஈழத்தமிழர்களைக் கைவிட்டதுபோல் மலையகத் தமிழர்களையும் கைவிடக்கூடாது – ஐ.நா.விடம் மனோ கணேசன் வலியுறுத்தல்

மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதிகாரசபை சட்டமூலத்தை இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, மத்திய மலைநாட்டைப் பாதுகாப்பதற்கான முழுமையான அதிகாரங்களை அந்த அதிகாரசபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இந்த அதிகாரசபையை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டார். மத்திய மலைநாடு இலங்கையின் இதயம் எனவும், மண் சரிவுகள், நீரூற்றுகள் வற்றுதல் உள்ளிட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், புதிய அதிகாரசபை மூலம் மலையகத் தமிழர்களின்

தொடர்ச்சி: பக்கம் 14

## வறண்ட வலயங்களில் நிலத்தடி நீர்மட்டம் கடும் சரிவு: யாழ்ப்பாணம், கல்பிட்டியாவில் 80% வரை வீழ்ச்சி



இலங்கையின் பல வறண்ட வலயப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் வழமையான பருவகால சரிவைச் சந்தித்து வருவதாக நீர் வள வாரியம் தெரிவித்துள்ளது. குறிப் பாக, யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் கல்பிட்டியா பகுதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நீர் வள வாரியத்தின் உதவிப் பொது மேலாளர் (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு) ருவன் ராஜபக்ஷ கூறுகையில், வறண்ட காலங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைவது இயல்பானது எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 14

# நேபாளம்–சீன எல்லைப் பகுதியில் பேரழிவு – 800 பேர் பலி



நேபாளத்திற்கும் சீனாவிற்கும் இடையிலான எல்லைக்கு அருகே ஏற்பட்ட பேரழிவுகரமான வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 800 ஆக உயர்ந்துள்ளது, மேலும் புதன்கிழமை(26) ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர். மத்திய நேபாளத்தில் உள்ள நீர்மின் திட்டங்களில் காணாமல் போன 900-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கண்டுபிடிப்பதற்கான மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேபாளம் மற்றும் சீனாவின் திபெத் பிராந்திய அதிகாரிகள், காணாமல் போனவர்களின் மொத்த எண்ணிக்கை 3,000-க்கும் சற்று அதிகமாக இருப்பதாகக் கூறியுள்ளனர், மேலும் சில உடல்கள் அண்டை நாடான இந்தியாவில் கரை ஒதுங்கியுள்ளன. திபெத்துடனான எல்லைக்கு அருகே நேபாளத்தில் உள்ள இமயமலைப் பகுதியில் ஏற்பட்ட பனிப்பாறை சரிவு, புதன்கிழமை பேரழிவுகரமான வெள்ளப்பெருக்கையும் நிலச்சரிவுகளையும் தூண்டியது. இது திரிசூலி மற்றும் போதேகோஷி நதிப் படுகைகளின் கரையோரங்களில் உள்ள கிராமங்களையும் நகரங்களையும் புதைத்தது.

வெள்ளிக்கிழமையன்று, இடிபாடுகள் குவிந்து உருவான புதிய ஏரியில் நீர்மட்டம் உயர்ந்ததால், இரண்டாவது வெள்ளம் ஏற்படும் என்ற அச்சத்தின் மத்தியில் தேடுதல் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. ஏரி அச்சுறுத்தல்

தொடர்ச்சி: பக்கம் 14

## நெதன்யாகுவின் மூத்த மகனின் உயிருக்கு அச்சுறுத்தல்



பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் மூத்த மகனின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அவர் அமெரிக்காவிலிருந்து இஸ்ரேலுக்கு விமானத்தில் அழைத்து வரப்பட்டதாக இஸ்ரேலின் உள்நாட்டு உளவுத்துறை தெரிவித்துள்ளது.

ஷின் பெட் சனிக்கிழமை(30) மாலை வெளியிட்ட ஓர் அறிக்கையில், “யாயிர் நெதன்யாகுவுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல் இருந்தது. இதன் காரணமாகவும், ஒரு மதிப்பீட்டிற்குப் பிறகும், அவரையும் அவரது பாதுகாப்புக் குழுவையும் அவசரமாக வெளியேற்றி இஸ்ரேலுக்குத் திரும்ப அழைத்து வர முடிவு செய்யப்பட்டது” என்று கூறியுள்ளது. அந்த அச்சுறுத்தலின் மூலத்தை அந்த அமைப்பு குறிப்பிடவில்லை.

அமெரிக்க ஒளிபரப்பு நிறுவனமான நியூஸ்மேக்ஸ், கடந்த டிசம்பரில் புளோரிடாவில் வசித்து வந்தபோது, யாயிர் நெதன்யாகு மீது ஈரான் நடத்தியதாகக் கூறப்படும் படுகொலை சதித்திட்டம் ஒன்று இலக்காக இருந்ததாக இந்த வார தொடக்கத்தில் செய்தி வெளியிட்டது.

இந்த சதித்திட்டம் குறித்து அறிந்த பிறகு, இஸ்ரேலிய உளவுத்துறை அமெரிக்க அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்ததாக, ஒரு அமெரிக்க சட்ட அமலாக்க அதிகாரியை மேற்கோள் காட்டி அந்த ஒளிபரப்பு நிறுவனம் செய்தி வெளியிட்டது. “ஈரான் எனது மகன்களில் ஒருவரைக் குறிவைத்தது. ஈரான் எனது மகன்களில் ஒருவரைக் கொல்ல, கொலை செய்ய முயன்றது” என்று பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலின் சேனல் 14-இடம் கூறியதைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளிவந்தது.

இஸ்ரேலியப் பாதுகாப்புப் படையினரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்த

தொடர்ச்சி: பக்கம் 14

## ஈரானிய ஏற்றுமதி–இறக்குமதி 35 சதவீதம் சரிவு



அமெரிக்காவுடனான ஆறு மாத காலப் போரினால் ஏற்பட்ட பெருகிவரும் பொருளாதார சேதங்களை ஈரான் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அமெரிக்கத் தடைகள் மற்றும் கடற்படை முற்றுகையின் கீழ் வெளிநாட்டு வர்த்தகம் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலாகச் சுருங்கிவிட்டதாக அதிபர் கூறியுள்ளார்.

சனிக்கிழமையன்று(29) இந்த ஒப்புதல்கள் வெளிவந்த நிலையில், தெஹ்ரான் பின்வாங்கப் போவதில்லை என்று சமிக்ஞை செய்ததுடன், அமெரிக்க அழுத்தத்தை எதிர்த்து நிற்கவும், ராஜதந்திரத்தை முன்னெடுக்கவும், ஹோர்முஸ் ஜலசந்தியின் மீதான தனது கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்ளவும் உறுதியளித்தது.

பொருளாதாரப் பாதிப்புகளைச் சரிசெய்வது, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது, வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் டாலரைச் சார்ந்திருப்பதை படிப்படியாகக் குறைப்பது உள்ளிட்டவை தற்போது முக்கியக் கவனமாக உள்ளது என்று அரசாங்கம்

தொடர்ச்சி: பக்கம் 14

## ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதை ஐஸ்லாந்து வாக்காளர்கள் நிராகரிப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது குறித்த பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான ஒரு முன்மொழிவை ஐஸ்லாந்து வாக்காளர்கள் நிராகரித்துள்ளனர். இது, 27 நாடுகளைக் கொண்ட அந்த அமைப்புடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய ஒளிபரப்பு நிறுவனமான RUV-இன் தகவல்படி, ஏறக்குறைய அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில், ‘வேண்டாம்’ என வாக்களித்த தரப்பு 52.5 சதவீதமும், ‘வேண்டாம்’ என வாக்களித்த தரப்பு 47.5 சதவீதமும் பெற்று முன்னிலையில் இருந்தது. அதிகாரப்பூர்வ முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்த முடிவு, ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை குறித்த வாக்கெடுப்பு அல்ல; மாறாக, ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டிருந்த இணைப்புப் பேச்சுவார்த்தைகளை ஐஸ்லாந்து மீண்டும் தொடங்க வேண்டுமா என்பது குறித்ததாகும்.

தொடர்ச்சி: பக்கம் 14

## இலங்கையின் 55.7% மக்கள் பன்முக அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர் – UNDP

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) பன்முக அச்சு றுத்தல் சுட்டெண் அறிக்கையின்படி, இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 55.7 சதவீதமானோர் கல்வி, சுகாதாரம், கடன் சுமை மற்றும் வாழ்க்கைத்தரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பன்முக அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாட்டின் வறுமை விகிதம் 25 சதவீதத்துக்கும் அதிகமாக இருப்பதுடன், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிக மானோர் உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடன் பெறுதல் அல்லது பொருட்களை அடகு வைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இதேவேளை, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட உலகளா விய குறைந்தபட்ச ஊதியச் சுட்டெண்ணில், 130 நாடுகளில் இலங்கை 120ஆவது இடத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு திறன் சமநிலையின் அடிப்படையில் இலங்கையின் குறைந்தபட்ச ஊதியம் மாதத்திற்கு சுமார் 200 அமெரிக்க டொலர் களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைந்த மட்டமாகும். பாகிஸ்தானில் 570 டொலர்களாகவும், நேபா ளத்தில் 490 டொலர்களாகவும், பங்களாதேஷில் 379 டொலர்களாகவும், இந்தியாவில் 233 டொலர்களாகவும் இந்த மதிப்பு பதிவாகியுள்ளது.

இந்நிலையில், அரசாங்கம் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வரவு–செலவுத் திட்ட முன்னேற்றம் குறித்து சாதகமான தகவல் களை வெளியிட்டு வந்தாலும், அவை மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமையை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மக்களின் உண்மையான வருமானம் மற்றும் கொள்வனவு திறனை அதிகரிப்பதுடன், வறுமையைக் குறைத்து வாழ்க்கைச் செலவுச் சுமையைத் தணிக்கும் வகையில் பொருளாதாரக் கொள்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத் தப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உற்பத்திக்கான உள்ளீடுகள் மீதான வரிச்சுமையை குறைப்பதுடன், சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஏற்படும் அதிக உற்பத்திச் செலவு களையும் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## நீதிபதிகளின் ஓய்வு வயதெல்லை தொடர்பில் ஐ.நா. கவலை: அரசாங்கம் விளக்கம்

நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் அரசாங்கத்தின் சட்டமூலங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்த கவலைகளுக்கு இலங்கை அரசு விளக்கமளித்துள்ளது.

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 22வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலத்தின்படி, உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 65 இல் இருந்து 67 ஆகவும், மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 63 இல் இருந்து 65 ஆகவும் உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது.



அத்துடன், பிரதம நீதியரசர் தனது 67வது வயதிலோ அல்லது நீதியரசராக நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 ஆண்டுகள் பூர்த்தியடையும் போதோ ஓய்வு பெறுவார்.

அதேநேரம், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை 19 இல் இருந்து 24 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. அதேவேளை, நீதித்துறை திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக மேல் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயது 61 இல் இருந்து 63 ஆக உயர்த்தப்படுவதோடு, ஏனைய நீதிபதிகள் மற்றும் நீதவான்களின் கட்டாய ஓய்வுபெறும் வயது 62 ஆக நிர்ணயிக்கப்படவுள்ளது.

மேலும், மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 110 இல் இருந்து 120 ஆக அதிகரிக்கப்படும். இவ்விரு சட்டமூலங்களும் கடந்த 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முதல் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.

தொடர்ச்சி: பக்கம் 14

## ஆசிரியர் தலையங்கம் | 31 ஆகஸ்ட், 2026

## அதிகாரப்பட்ட இன்றைய உலகில் இறைமை பேண ஈழத்தமிழர்கள் இனமாக சனநாயக போராட்டங்களில் இணைய வேண்டும்

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் கோர்டன் பிறவுண் " சுற்றியுள்ள உலகில் பிரிவினை மற்றும் அபாயகரமான அரசியலை மக்கள் நிராகரிக்கின்றனர். நாங்கள் இது முடியுமெனக் கட்டாயம் கட்டியெழுப்ப வேண்டும். (Around the world People are rejecting divisive and dangerous politics. We can – and must – build on that. Gordon Brown)" என உலகிற்கு அழைப்பு விடுத்துள்ளார். "மனித உரிமைகளிலும் காலநிலையைப் பேணுவதிலும் செயற்கை நுண்ணறிவை இவற்றைப் பேணுவதில் பயன்படுத்துவதிலும் பெருமளவிலான உலகப்பொதுமக்கள் அனைத்துலக ஒத்துழைப்பை வேண்டி நிற்பதை இத்தகைய மனநிலை உள்ள நாடுகள் ஒன்றாக இணைந்து வழங்கிட வேண்டும்" என அழைப்பு விடுத்துள்ள லேபர் கட்சியின் முன்னாள் பிரித்தானியப் பிரதமரும் பொருளியல் சிந்தனையாளரும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக கல்விக்கான சிறப்புத் தூதுவருமான கோர்டன் பிறவுண் அழைப்பு விடுத்துள்ளார். இத்தகைய மனநிலையுள்ள நாடுகள் மட்டுமல்ல உலகில் உள்ள மக்களும் இவ்விடயத்தில் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைவதற்கான தம்மாலான முயற்சிகளை அரசற்ற தேசஇனமாகவுள்ள ஈழத்தமிழினம் போன்ற உலகின் தேசஇனங்களும் தமக்குள் தேசிய ஒருமைப்பாடடை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் ஒன்றிணைய வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் உள்ள உலக டூம்ஸ்டே கடிகாரம் 89 நொடிகளே உலக அழிவுக்கு உள்ளதென எதிர்வு கூறியுள்ள நிலையில் கோர்டன் பிறவுணின் இந்த அழைப்பு அனைத்துலக முக்கித்துவம் வாய்ந்ததாக அமைகிறது. இந்த டூம்ஸ்டே கடிகாரம் எமது நாளாந்த கடிகாரம் போன்ற அளவீடு உடையது அல்ல. இதன் ஒவ்வொரு டிக் சத்தமும் உலகின் அழிவுக்கான நிலைமைகள் உருவாகும் பொழுதே ஏற்படும். அணுசக்தியைக் கண்டறிந்த அயன்ஸ்டினாலும் அவர்கால அறிவியலாளர்களாலும் அணுவாயுதத்தினாலேயோ அல்லது காலநிலை சீர்கேட்டாலோ உலகப் பேரழிவு ஏற்படக்கூடிய நிலைகள் வருகையில் எச்சரிப்பதற்கான கடிகாரம் போன்ற ஒரு எச்சரிப்புக் கருவி. இதில் நொடி என்பது அந்தக் கடிகாரத்தின் முட்கள் நள்ளிரவை நெருங்குவதற்கான வேகத்தை அறிவிப்பதன் மூலம் உலகப்பேரழிவை தடுப்பதற்கான முற்பாதுகாப்பை ஏற்படுத்தும் ஒரு அறிவியல் குறியீட்டு முயற்சியாக இருபத்தோராம் நூற்றாண்டின் விஞ்ஞான மனிதன் எனப் புகழாரம் பெற்ற அயன்ஸ்டினால் தொடங்கப்பெற்று இன்று வரை பல நோபல் பரிசுபெற்ற சமுகத்தவர் அறிவியல் சமுகத்தவர் இணைப்பால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 1991 இல் அமெரிக்க ரஸ்ய பனிப்போர் முடிந்து உலக அழிவு தடுக்கப்படுகிறது என்ற நிலை தோன்றிய பொழுது இந்தக் கடிகாரம் 17 நிமிடங்கள் பின்னோக்கி நகர்த்தப்பட்டது. இப்போது 89 நொடிகளே உலக அழிவுக்கு உள்ளதென்கிற அளவுக்கு அபாயகரமான நிலையில் உலகு உள்ளதென இக்கடிகாரம் எச்சரிப்பதால் உடனடியாக இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் மனிதர்கள் ஈடுபட வேண்டுமென்பதே இதன் பொருள் என்பதனை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

கோர்டன் பிறவுண் அவர்கள் 1960களில் கியூபாவில் ரஸ்யா அமெரிக்காவை நோக்கி ஏவுகணை தளம் அமைத்ததை விட இப்பொழுது மோசமான நிலை தோன்றியுள்ளது என்பதை கூறிவிட்டே இந்த டூம்ஸ்டே கடிகார எச்சரிப்பையும் எடுத்துரைத்துள்ளார். ட்ரம்பின் ஈரானுடன் பொருளாதார தொடர்புடைய நாடுகளும் அமெரிக்காவின் இலக்காக்கப்படுமென்கின்ற எச்சரிப்பு சீனாவுக்கான மறைமுக எச்சரிப்பா என்கிற கேள்வி எழுகிறது. அதே வேளை ட்ரம்ப் ஈரானின் மனித நாகரிகம் ஒரு இரவிலேயே அழிக்கப்படுமென எச்சரித்தமை வெளிப்படையான ஈரானிய மக்கள் மேலான இனஅழிப்பு அறிவிப்பாகவே கோர்டன் பிறவுண் அவர்களால் அவரது கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டு கூடவே அமெரிக்காவுடன் நீண்டநாள் கூட்டாண்மை கொண்ட ஒமானை அது ஈரானுடன் ஹோர்மூஸ் நீரிணை போக்குவரத்துக் குறித்து ஒப்பந்தம் செய்தால் தாக்குவேன் என்னும் ட்ரம்ப் அவர்களின் எச்சரிப்பை அமெரிக்காவுக்கு உலகளாவிய பெருமை சேர்த்த தூண்களாக விளங்கிய மனித உரிமைகளைப் பேணல், பன்நிலை ஒப்பந்த ஒத்துழைப்பு மனிதாய உதவிகள் சட்டத்தின் ஆட்சி என்பவற்றையே சிதைக்கும் செயலாக அமைந்து விட்டதெனவும் கோர்டன் பிறவுண் விபரித்துள்ளார். இது மூன்றாம் உலகப் போருக்கான தூண்டலாக மாறிவிடக் கூடிய அபாயமாக வளர்வதனையே டூம்ஸ்டே கடிகாரம் 89 நொடிகளே உலக அழிவுக்கு உண்டென்ற எச்சரிப்பும் உறுதி செய்து அதிலிருந்து மீளுவதற்கான உடனடி விழிப்புணர்வுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

அமெரிக்கா மட்டுமல்ல ரஸ்யா சீனா ஆகிய உலகின் வல்லாண்மைகளும் உலகப் பேரழிவுக்கான ஊக்கப்படுத்தல்களையே உலக அரசியலாக்கிக் கொண்டிருக்கின்றன. ரஸ்ய அரசத்தலைவர் புடீனின் யப்பானுக்குரியதாக 1947 களில் முடிவான ரஸ்ய எல்லைத் தீவுக்குச் சென்றமை யப்பானை நோக்கிய ரஸ்ய அணுவாயுத நிலையெடுப்பா என்கிற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. உக்ரேனுக்கு சக்திபடைத்த ஏவுகணைகளை பிரித்தானியாவும் பிரான்சும் கொடுப்பது நெருப்புடன் விளையாடும் விளையாட்டு என ரஸ்யா எச்சரித்தமை ஐரோப்பிய நாடுகளுடன் பிரித்தானியா மேலும் நெருக்கமாக பாதுகாப்பில் இணைய வேண்டிய சூழ்நிலையை மேலும் பலப்படுத்தியுள்ளது. சீனாவின் அரசத்தலைவர் தாய்வான் தங்களுடைய நிலப்பரப்பாக மீள இணைப்பது உறுதியானதென அறிவித்துள்ளது மூன்றாம் உலகப் போருக்கானசூழலை மேலும் அதிகரித்துள்ளது. இந்த உலக மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் முன்னைய ஒட்டமன் பேரரசு அனுபவமுள்ள துருக்கியும் பண பலம் படைத்த சவூதி அரேபியாவும் அணுக்குண்டை வைத்திருக்கும் பாக்கிஸ்தானும் இணைந்த பாதுகாப்புக் கூட்டமைப்பு என்பது நேட்டோவுக்குச் சமாந்திரமான இஸ்லாமியநாடுகளின் கூட்டமைப்பா என்கிற கேள்வி எழுந்துள்ளது. இதில் பங்களாதேஸ் இணைய முயற்சிப்பது இந்தியாவுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலாகுமா என்கிற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்த இக்கட்டான உலக அரசியல் பொருளாதார போர் சூழலில் யப்பான், தென்கொரியா, சவூதி அரேபியா, எமிரேட்ஸ், எகிப்து, போலந்து, யேர்மனி போன்ற நாடுகள் தங்கள் பாதுகாப்புக்கான நவீன ஆயுதங்களை வளப்படுத்திப் பலப்படுத்துவதுடன் தங்களுக்கான அணுவாயுதங்களை தாங்களும் ஏதோவிதமாக தங்கள் நாடுகளில் வைத்திருக்க வேண்டுமென்கிற நடைமுறை எதார்த்தத்தை உருவாக்கியுள்ளது. இவ்வாறான உலகின் பாதுகாப்புக்கான பதற்றமான நடைமுறை நிலைமைகளே டூம்ஸ் கடிகாரத்தை உலக அழிவுக்கான விரைவுக்காலமாக 89 நொடிகளை அறிவிக்க வைத்துள்ளது. இந்த சமகாலத்தன்மையை விளக்கும் வகையிலேயே அனைத்துலக சட்டங்களுக்கு கட்டுப்பாடான முறையில் செயற்படாது அதிகார வலுக்கொண்டு செயற்படுவனவாக வல்லரசுக்கள் மாறிவிட்டன என்பதனை கோர்டன் பிறவுண் தான் அறக்கட்டளையாளராக இருக்கும் போர்ட் பவுண்டேசனின் 34 நாடுகளில் 36000 மக்களிடை நடத்திய கருத்துக்கணிப்பில் 55வீதமானவர்கள் பிரிவினைகளையும் அபாயகரமான அரசியல்களையும் நிராகரித்துள்ள நிலையில் அவர்களின் முடிவை நடைமுறைப்படுத்தியே ஆவதற்காக முடியுமென்ற உறுதியுடன் செயற்படல் வேண்டும் என கோர்டன் பிறவுண் அறிவித்துள்ளதுடன் பிரித்தானியாவின் புதிய பிரதமர் சட்டத்தின் ஆட்சி மனித உரிமை காலநிலை சீர்கேட்டிலிருந்து விடுபடுதல் செயற்கை நுண்ணறிவினை பாதுகாத்தல் என்பனவற்றில் உறுதியுடன் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

கனடாவின் பிரதமர் மற்றும் பின்லாந்தின் பிரதமர் முன்னிலைப்படுத்தும் அரசியல் பொருளாதார அனைத்துலக வர்த்தக மற்றும் அனைத்துலகப் பாதுகாப்பு இணைப்பில் அவுஸ்திரேலியா,இத்தாலி, ஜப்பான், ஐக்கிய இராச்சியம்,பிரான்ஸ், பிரேசில், தென் கொரியா போன்ற நாடுகளுடன் இந்த முயற்சியில் இறங்க வேண்டுமென வழிகாட்டியுமுள்ளார். உலக நடைமுறை அரசியல் இவ்வாறு இருக்கும் இந்நிலையில் மன்னார் வங்காள விரிகுடாப்பகுதியை எண்ணைய் அகழ்வு ஆய்வுக்கென சிறிலங்கா அனைத்துலக கம்பெனிகளின் டென்டரை அறிவித்துள்ளது. வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிக்கிற கதையாக ஈழத்தமிழர்களின் தாயகப் பகுதிகளை சிறிலங்காவுக்கான பணவரவுப் பகுதிகளாக ஈழத்தமிழர்களின் விருப்புப் பெறப்படாது செய்யப்படும் செயலாக மட்டுமல்லாது இந்தியத் துணைக்கண்டத்தின் தெற்காசியாவின் அரசியல் பொருளாதார அமைதி பிரச்சினையாகவும் பரிணாமமடையும் தன்மை தோன்றியுள்ளது. அதே நேரத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாளாந்த அரசியல் வாழ்விலும் சிறிலங்காவின் நீதி அமைச்சரும் மீன்வளத்துறை அமைச்சரும் இணைந்து யாழ்ப்பாண செயலகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அனைத்துலக நாளன்று புள்ளிவிபரங்களால் தாங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதிக்கானதும் அவர்களின் கிட்டிய குடும்பங்களுக்கானதுமான புனர்வாழ்வுக்கானதுமான செயற்பாடுகளில் ஈடுபடுவதாக உலகிற்கு றீல் காட்டிக் கொண்டிருந்த நேரத்தில் தங்களின் யாழ்ப்பாண செயலக வாயிலில் பாதிப்புற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் கிட்டிய குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக தாய்மார் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சனநாயகப் பங்களிப்பை படையினரைக் கொண்டு அவர்களைத் தூக்கி வீசிய காட்சியை சிறிலங்காவின் நீதி அமைச்சர் கையலைபேசியில் காட்சியாகக் கண்டு களித்ததை ஊடகவியலாளர்கள் வெளிப்படுத்தியதால் ஆத்திரமடைந்த மீன்வளத்துறை அமைச்சர் ஊடகவியலாளரை திட்டியதுமான செயற்பாடு தேசிய மக்கள் சக்தி அரசின் ஈழத்தமிழர் குறித்த நிலைப்பாட்டை உலகிற்கு தெளிவாக்கியுள்ளது.

இந்த நிலையில் ஈழத்தமிழர்கள் இனமாக ஒருமைப்பாட்டுடன் சனநாயக போராட்டங்களில் இணைய வேண்டுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி காண்டீபன் யாழ்ப்பாணத்தில் செயலகத்து சிறிலங்கா அமைச்சர்கள் செயற்பாடு குறித்து விடுத்த அறிக்கையில் அழைப்பு விடுத்த பொழுது அந்தத் தாயமார்கள் தங்கள் பிள்ளைகளுக்காக மட்டுமல்ல தாயகத்திலும் உலகிலும் வாழும் ஒவ்வொரு ஈழத்தமிழினப் பிள்ளையினதும் பாதுகாப்புக்காக தன்மான வாழ்வுக்காக போராடுகிறார்கள் என்ற உண்மையை ஈழத்தமிழர்களின் உள்ளங்களில் பதித்துள்ளார். இதனை குறிப்பாகப் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் மனதிருத்தி கோர்டன் பிறவுண் தெளிவுபடுத்தியுள்ள "அதிகாரப்பட்ட இன்றைய உலகில் இறைமை பேண இனமாக சனநாயக போராட்டங்களில் இணைய வேண்டும்" என இலக்கு மேல் அழைப்பு செய்ய விரும்புகிறது. ஏனெனில் ஈழத்தமிழர்களின் இறைமையை உலகம் ஏற்காதவரை ஈழத்தமிழர்களுக்கான நீதி நடைமுறைச்சாத்திமற்றதாகவே தொடரும் என்பதையே யாழ்ப்பாண செயலகத்தில் பாதிக்கப்பட்ட தாயமாரின் சனநாயக உரிமை மறுக்கப்பட்டமை உலகுக்கு தெளிவாக்கியிருக்கிறது. அனைத்துலகத் தலையீட்டாலேயே நீதி கிடைக்குமென்பதை உறுதிப்படுத்தும் அழைப்பாக ஆகஸ்ட் 30ம்நாள் அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஐ.நா.வின் உலகநாளையொட்டி யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டோரால் முதன்முறையாக நடாத்தப்பெற்ற அனைத்துலக மாநாட்டில் உரையாற்றிய மன்னார் கத்தோலிக்க ஆயர் பேரருள் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை அவர்கள் "இந்நாளை கொடூரமனிதர்கள் நாளாக முன்னெடுக்க வேண்டுமெனவும் அத்தகைய கொடூரமனிதர்களாலேயே எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டனர் எனவும் நீதிக்கான செயன்முறையின் பொறுப்பாளிகள் நியாயமானவர்களாக இருந்தால் நீதிக்கான பயணம் மிகக்குறுகியதாகும் எனவும் அத்தகைய நியாயமானவர்களை இதற்குப் பொறுப்பாக நியமிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம் எனவும் குறிப்பிட்டுள்ளார் என்பதையும் இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

ஆசிரியர்




**விதுரன்**

“ஐயா... ஐயா.... நில்லுங்கோ... என்ட மகனை 30 வருசமாய் தேடுறன் காணாமல் போனவங்களில 31 பேர் கண்டுபிடிக்கப்பட்டதா பத்திரிகையில செய்தி வந்திருக்கு... என்ட மகன் எங்கே என்று சொல்லுங்கோ... இந்த படத்தில இருக்கிறவர் தான் ஐயா என்ட மகன்... ஒருக்கால் பாருங்கோ.... “ என்று யாழ். மாவட்டச் செயலகத்தின் பிரதான வாயில் படிக்கட்டுகளில் கதறி அழுதவாறு தாயொருவர் வருகின்றார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்சன நாணயக்காரவை நோக்கியே குறித்த தயார் ஓடி வந்து கதறி அழுது மன்றாடியபோதும் அவர் அருகில் இருந்த இளங்குமரன் எம்.பியோ அதிகாரிகளோ தாயாரின் கோரிக்கையை அமைச்சருக்கு மொழிபெயர்த்துக்கூடக் கூறாது மௌனம் காத்துள்ளனர்.



குறித்த மௌனம், நீடிக்கவும், அதனைத் தொடர்ந்து அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கதறி அழுத தாயாரை ஆசுவாசப்படுத்திவிட்டு அவ்விடத்திலிருந்து எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகமாகச் சென்று விடுகிறார்.

இந்த அணுகுமுறையானது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்தை தற்போதைய அரசாங்கம் எவ்வாறு கையாள முனைகின்றது என்பதற்கான மிகத் தெளிவான பிரதிபலிப்பாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுபூர்வமான கோரிக்கைகளை நேரடியாகச் செவிமடுக்காது, அவர்களை ஆசுவாசப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அந்த விவகாரத்தை மலினப்படுத்தி விடுவதும், வெறும் எண்களின் கணக்காக மாற்றி நீர்த்துப்போகச் செய்வதும் தான் தற்போதைய அநுர அரசாங்கத்தின் போக்காக மாறியுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் ஆகஸ்ட் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, தனது அன்பிற்குரியவருக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வது அவரது குடும்பத்தின் அடிப்படை உரிமையாகும்; அது அரசியல் கோரிக்கை அல்ல, அடிப்படை மனித உரிமை; அது நீதிக்கான பிரச்சினை’ என மிகவும் நேர்த்தியான வார்த்தைகளால் வெளிப்படுத்தினார்.

மேலும், இது ஒரு சமூகத்திற்கு மட்டும் உரித்தான பிரச்சினை அல்ல இலங்கையில் வெவ்வேறு காலக் கட்டங்களில் வெவ்வேறு இன மற்றும் அரசியல் பின்னணியைக் கொண்ட நபர்கள் காணாமல்போயுள்ளனர். இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பது ஒட்டுமொத்த இலங்கைச் சமூகத்தினதும் பொறுப்பாகும்”என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இந்த அழகிய வார்த்தைகள் உதிர்க்கப்பட்டுக் கொண்டிருந்த தருணத்திலேயே மாவட்ட செயலகத்தின் பிரதான வாயிலில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரும் சமூக ஆர்வலர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அவர்கள் மாவட்ட செயலகத்துக்குள் பிரவேசித்து விடக்கூடாது என்பதற்காக பிரதான வாயில்கள் மூடப்பட்டு பொலிஸார் களமிறக்கப்பட்டிருந்தனர் அத்தடைகளை உடைத்து பிரவேசிக்க முயன்ற தாய்மார்களை பொலிஸார் இரும்புக்கரம் கொண்டு அடக்கியிருந்தமையும் மிகவும் முக்கியமானது.

பொலிஸாரின் வலிந்த அடக்குமுறையும், அச்சுறுத்தல்களும் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருந்தபோது, செயலகத்துக்குள் இருந்த நீதி அமைச்சர் ஹர்ஷனவோ அல்லது அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனோ அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் முன்னாள் நீதிபதி மகேஷ் கட்டுலந்தவோ வெளியில் வந்திருக்கவில்லை.

அவர்கள், ‘வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் ஒரு சந்திப்பு’ என்ற பெயரில் கடிதங்களை அனுப்பி வருவித்திருந்த உறவுகளை அமரவைத்து, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தேசிய நினைவு தினத்தை ஒட்டி நினைவுகூர்ந்து கொண்டிருந்தனர்.

அதுமட்டுமன்றி, அங்கு சமூகமளித்திருந்தவர்கள் மத்தியில், தெற்கிலும் வடக்கிலும் வெவ்வேறு காலப் பகுதிகளில் மனிதர்கள் காணாமலாக்கப்பட்டனர் என்பதை வெளிப்படுத்தி சமநிலைப்படுத்தவே முனைந்து கொண்டிருந்தனர்.



காணாமலாக்கப்படுதல் இரு தேசங்களிலும் நடை பெற்றிருக்கின்றன என்றாலும் வட,கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட வலிந்து காணாமலாக்கப்படுதல் மற்றும் இனவழிப்புப் பின்னணியை ‘பொதுவான சமூகப் பிரச்சினை’ என்ற போர்வையில் மூடிமறைக்க முடியாது.

தற்போதைய ஆட்சியாளர்களான தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் வெறும் 4 ஆசனங்களுடன் இருந்த காலத்தில், கொழும்பிலும் வடக்கிலும் பாதிக்கப்பட்ட தாய்மார்களுடன் இணைந்து வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். யாழ்ப்பாணம் வந்து அவர்களின் வீடுகளில் இளைப்பாறினார்கள்.

ஆனால், தற்போது அதிகாரத்திற்கு வந்த பின்னர், அதே தாய்மார்கள் போராடும்போது, அவர்களைப் பொலிஸாரைக் கொண்டு பலப்பிரயோகம் செய்து, ஆடைகள் அவிழும் நிலையில் இழுத்து வெளியேற்றும் கொடூரமே அரங்கேறியுள்ளது.

இதேநேரம், இந்த அவலங்களை அறிக்கையிட்ட ஊடகவியலாளர்களை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் சபித்ததோடு ‘செய்தி என்றால் என்ன என்றும்’ வகுப்பெடுத்திருந்தார்.

அத்தோடு அநுரவின் தோழர்கள் சிலர் பிரம்மாண்டமாக காணாமல் போனோர் தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம், வெளியில் 10 பேர் வரையே போராடுகிறார்கள்’ என்று சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதும் அவர்களின் சுயரூபத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

யாருடருன் இணைந்து நீதி கேட்டுப் போராடினார்களோ, அவர்களையே தற்போது அடக்குமுறைக்கு உட்படுத்துவதும், அது குறித்துச் செய்தி வெளியிடும் ஊடகங்களைச் சபிப்பதும் அவர்களின் மூன்றாந்தர அரசியல் நயவஞ்சகத்தையே காட்டுகிறது.

தம்முடன் ஒன்றாக இருந்து உணவருந்தி களச் செயற்பாட்டில் ஈடுபட்டு பின்னர் கொள்கை முரண்பாட்டால் வெளியேறியிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் 2011ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி காணாமலாக்கப்பட்டனர்.



அவர்களின் விவகாரத்தில்கூட, கட்சி அரசியலும் அரசு அதிகார மட்டங்களின் நலன்களும் காரணமாக நீதியைக் கோருவதற்கு கூட தயாரில்லதவர்களாக இருக்கும் அநுர அரசாங்கத்தினர் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு எவ்வாறு உண்மையான நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்பது இங்குள்ள பிரதான கேள்வியாகின்றது.

அரசாங்கமும் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகமும் வெளியிடும் புள்ளிவிபரங்கள், பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான வேதனையைத் தணிப்பதற்கு மாறாக, சர்வதேசத்தின் அழுத்தங்களிலிருந்து தப்பிப்பதற்கான ஒரு கணக்குக் காட்டும் முயற்சியாகவே தோன்றுகின்றன.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி மகேஷ் கட்டுலந்த மற்றும் அமைச்சர் ஹர்ஷன வெளியிட்ட தரவுகளின்படி, இதுவரை 23,352 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் 16,966 முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு முதற்கட்ட விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டில் அமைச்சரவை பத்திரத்தின் மூலம் 375 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, 25 விசாரணைக்குழுக்கள் மூலமாக 2026 ஜூலை மாத இறுதியளவில் 9,819 முறைப்பாடுகளுக்கான பூர்வாங்க விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

எஞ்சிய முறைப்பாடுகள் தொடர்பில் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு 2027 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அனைத்தையும் நிறைவுசெய்ய அரசு திட்டமிட்டுள்ளது என்று பட்டியல் நீள்கின்றது.

அதுமட்டுமன்றி, இதுவரை முறைப்பாடு கிடைக்கப்பெற்றவர்களில் 31 பேர் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறும் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் இராணுவத்தினரிடம் இருந்து எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதைக் கூறி மீண்டும் படைகளுக்கு வெள்ளையடிக்கும் செயற்பாட்டையே மேற்கொள்ள முயற்சிக்கின்றது.

**தொடர்ச்சி: பக்கம் 14**




**சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மாநாட்டின் நோக்கம் குறித்து மட்டக் களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோர் சங்கத் தலைவி மற்றும் வடக்கு-கிழக்கு மாவட்டங்களின் உப தலைவி அமலராஜ் அமலநாயகி இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய கருத்துக்கள்.**

**கேள்வி:**
**சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் என்ன?**

2009,மே,18,ல் முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்த பின்னர் இனப்படுகொலைக்காகவும், வலிந்து காணாமல் ஆக் கப்பட்டவர்கள் தொடர்பாகவும் சர்வதேச நீதியையே வடகிழக்கில் உள்ள அனைத்து தமிழ்தேசிய கட்சிகள், சிவில் அமைப்புகள் வலியுறுத்திவந்த நிலையில் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் வடக்கு-கிழக்கு எட்டு மாவட்டங்களையும் இணைத்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக தொடர்ச்சியான போராட்டங்களை முன் னெடுத்து வருகின்றோம். ஆரம்பத்திலிருந்தே சர்வதேச நீதிப் பொறிமுறையின் ஊடாகவே எமக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு அதனையே வலி யுறுத்தி வருகின்றோம்.



இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட விசா ரணைகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நம்பிக்கை இல்லை. பல ஆண்டுகளாக முறைப்பாடுகளைச் செய்தும், பல்வேறு இடங்களில் தேடியும், எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை தெளிவான பதில் கிடைக்கவில்லை. நேரடியாக படையினரிடம் ஒப்படைத்த எமது உறவுகளுக்கும் என்ன நடந்தது என்பதை இலங்கை அரசுகள் இதுவரை கூறவில்லை.

**கேள்வி:**
**உங்களுடைய தனிப்பட்ட அனுபவம் என்ன?**

எனது கணவர் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் உள்ள மரப்பாலம் முகாமில் வைத்து பாதுகாப்புப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டார். இதனை நேரில் கண்ட சாட்சிகளும் உள்ளனர். அன்றிலிருந்து அவரைத் தேடி பல்வேறு இடங்க ளில் முறைப்பாடுகளைச் செய்துள்ளேன்.

“அவர் ஏதேனும் குற்றம் செய்திருந்தால், அவர் எங்கு இருக்கிறார் என்பதைத் தெரிவியுங்கள்” என்றுதான் நான் தொடர்ந்து கேட்டு வருகின்றேன். என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதே நிலையில்தான் உள்ளன.




**கேள்வி:**
**காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் (OMP) மீதும் நம்பிக்கை இல்லையா?**

ஆரம்பத்தில் OMP ஊடாக எமது உறவுகளின் நிலையை அறிய முயற்சிக்குமாறு எமக்கு அறிவுறுத் தப்பட்டது. அதன்படி, ஐந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் வழக்குகள் தொடர்பான சாட்சிகளையும் ஆவணங்களையும் OMP-யிடம் வழங்கினோம்.

குறிப்பிட்ட காலத்துக்குள் குறைந்தது ஒருவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே அவற்றை வழங்கினோம். ஆனால், பல ஆண்டுகளுக்குப் பின்னரும் அந்த வழக்குகள் தொடர்பில் உரிய பதில் கிடைக்கவில்லை. இதுபோன்ற அனுபவங்கள்தான் OMP மீதான எமது நம்பிக்கையை இழக்கச் செய்தன.




சுருக்கமாக கூறினால் இந்த அலுவலகம் பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளையும் நிவாரணங்களையும் வழங்குதல். காணாமல் போன மைக்கான சான்றிதழ்கள் அல்லது இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தல்.

நாங்கள் நிவாரணமோ, நட்ட ஈடோ,இறப்பு சான்றி தழோ கேட்கவில்லை எமக்கு காணாமல் ஆக்கப்பட்டதற்கு யார் பொறுப்பு அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கூறவேண்டும் அதற்கான சர்வதேச நீதியே தேவை OMP அலுவலகம்மீது எமக்கு நம்பிக்கை இல்லை.

**கேள்வி:**
**இந்த மாநாட்டின் மூலம் சர்வதேச சமூகத்திடம் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?**

பல ஆண்டுகளாக இலங்கை அரசாங்கத்திடம் எமது கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றோம். முறைப் பாடுகள் செய்துள்ளோம்; போராட்டங்களை நடத்தியுள் ளோம். ஆனால், உரிய பதில் கிடைக்கவில்லை.

எனவே, இந்த மாநாட்டுக்கு சர்வதேச பிரதி நிதிகளை அழைத்து, எமது அனுபவங்கள், சாட்சிகள் மற்றும் ஆவணங்களை அவர்களிடம் முன்வைக்க உள்ளோம். இதுவரை இலங்கை அரசாங்கத்திடம் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை என்பதையும் தெளிவு படுத்த உள்ளோம். அதுமூலமாக சர்வதேத்தைக்கு இந்த மாநாடுமூலமாக அழுத்தம் கொடுக்கலாம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

**கேள்வி:**
**மாநாட்டில் வேறு என்ன நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன?**

பல ஆண்டுகளாக எமது அமைப்பு வெளியிட்ட அறிக்கைகள், ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கிய பரிந்து ரைகள் மற்றும் போராட்டங்களின் பதிவுகள் ஆகியவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியபோது உயிரிழந்த ஏறக்குறைந 600-க்கும் மேற் பட்ட தாய்மார்களின் சாட்சியங்களையும் தொகுத்து வெளியிடவுள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பயன் படுத்திய பொருட்களை வைத்து கண்காட்சியும் நடத்தப் படவுள்ளது.



**கேள்வி:**
**புலம்பெயர் தமிழ் சமூகத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு என்ன?**

புலம்பெயர் தமிழ் சமூகம் எமது போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும். எமது ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை அவர்கள் வாழும் நாடுகளில் வெளியிட்டு, சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும்.

இந்த மாநாட்டுக்கும் ஆவணப்படுத்தல் பணி களுக்கும் நிதி உதவி தேவைப்படுகிறது. ஆய்வுகள் மேற் கொண்டு, தங்களிடம் உள்ள தகவல்களையும் எம்முடன் பகிர வேண்டும். தொடர்ச்சியாக சர்வதேச நீதிக்காக அழுத்தங் களை வழங்கவேண்டும். எனவே, சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் முழுமையாகத் தலையிட்டு, உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யக்கூடிய சர்வதேச நீதிப் பொறிமுறையை உருவாக்க வேண்டும். எமது உறவுக ளுக்கு என்ன நடந்தது என்பது தெரியவரும் வரை, இந்தப் போராட்டம் தொடரும்.

• • •




பா.அரியநேத்திரன்

இந்தியா இலங்கை ஒப்பந்தம் 1987அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இடையே கையெழுத்தான ஒப்பந்தம், 13ஆவது திருத்தச் சட்டத்திருத்தம் மூலம் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் அதிகாரப் பகிர்வுக்காகவும் கொண்டுவரப்பட்டது.

அதனால் அதிகாரப்பகிர்வு என்ற போர்வையில் இணைந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தல் 1988,ல், ஒரு தடவையும், 2006, ல் இணைந்த வடகிழக்கு மாகாணங்கள் சட்ட ரீதியாக மகிந்தராஜபக்ஷ அரசு பிரித்த பின்னர் கிழக்கு மாகாணசபை தேர்தல் 2008, 2012,ல் இரண்டு தேர்தல்களும், 2013, ல் வடமாகாணசபை தேர்தல் ஒருதடவையும் மட்டும் நடத்தப்பட்டது.



அதன்பின்னர் 2017, ல் நல்லாட்சி அரசில் இணக்க அரசியல் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் ஆகியோருடன் தமிழ்தேசிய கூட்டமைப்பு கூட்டாக இணைந்து ஆட்சியமைத்த காலத்தில் மாகாணசபை தேர்தல் சட்டமூலம் திருத்தப்பிரேரணைக்கு ஆதரவு கொடுத்தமையால் கையில் கிடைத்த மாகாணசபை சிறிய அதிகாரங்களும் ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பில் ஆளுநர்களின் அதிகாரத்தில் முழுமையாக சென்றன.

2009, மே,18, ல் முள்ளிவாய்காலில் விடுதலைப் புலிகளின் ஆயுதப்போர் மௌனித்த பின்னர் வடகிழக்கின் தமிழர்களின் தலைமையாக 2010, பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வடகிழக்கு தமிழர்கள் அங்கீகாரம் தந்திருந்தனர்.

அந்த 2010, தொடக்கம் 2026, வரை 17, வருடங்களாக இந்திய பிரதமர்கள், இந்திய இராஜ தந்திரிகளுடன் தமிழ் தேசிய தலைமைகள் பல்வேறு பேச்சுவார்தைகளில் ஈடு பட்டனர் ஆனால் இதுவரை இந்திய அரசால் இலங்கை ஆட்சியாளர்களை வலியுறுத்தி ஒரு அரசியல் தீர்வை வழங்க முடியவில்லை. மாகாணசபைத் தேர்தலை கூட நடத்த முடியவில்லை. கூடிக்கலைந்த பேச்சுக்களாவே கடந்தன.

கடந்த 2010, தொடக்கம் 2026, வரை 17, வருடங்களாக இந்தியபிரதமர், இந்திய அமைச்சர்கள், இந்திய தூதுவர்கள், இந்திய இராஜதந்திரிகளுடன் தமிழ்தேசிய தலைமைகள் பேசியது செய்திகளாகவும், நிழல் படங்களாகவும் மட்டுமே வெளிவந்தன. பலன் எதுவும் இல்லை. அந்த முக்கிய சந்திப்புகள் சில.

2010 யூன்09 ல் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டபோது, புது டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை தொடர்பான இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்தி கூட்டுப் பிரகடன வெளியீட்டின் போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட மாகாண சபைகளுக்கு விரைவில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை ஜனாதிபதி மகிந்தராஷபக்ஜவை வலியுறுத்தினார்.

2011 யூன் 16,17 ல் இருதரப்பு உறவுகள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் நல்லிணக்கம் குறித்து விவாதிக்க இந்தியாவின் உயர்மட்டக் குழுவினர் சிவசங்கர் மேனன், நிருபமா ராவ், பிரதீப் குமார் ஆகியோர் இலங்கை வந்தசமயம் தமிழ்தேசிய அரசியல் கட்சி பிரமுகர்களை சந்தித்து மாகாணசபை, அதிகாரப்பகிர்வு தொடர்பாக தாம் இலங்கை அரசிடம் தெளிவாக கூறியதாக கூறினர் . ஆனால் எதுவுமே நடக்கவில்லை.

2012, மார்ச்,19, ல் இலங்கைக்கான இந்தியாவின் உயர் ஸ்தானிகராக பணியாற்றியவர் அசோக் கே. காந்தாவுடன் தமிழ் தரப்பு சந்தித்து மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த வலியுறுத்தியது.

2012 அக்டோபர் 10 முதல் 13 வரை, இரா. சம்பந்தன் தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் 07 பேர் கொண்ட குழு இந்திய வெளியுறவு அமைச்சரின் அழைப்பை ஏற்று புது டெல்லிக்குப் பயணம் மேற்கொண்டனர். . இக்குழுவினர் இந்தியப் பிரதமர், வெளியுறவு அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்து இலங்கைப் தமிழர் அரசியல் தீர்வு குறித்துப் பேசினர். இதில் இரா சம்மந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன்,பொ. செல்வராசா, அப்பாபிள்ளை விநாயகமூர்தி, செல்வம் அடைக்கலநாதன், மற்றும் எம். ஏ. சுமந்திரன். ஆகியோர் கலந்து கொண்டு அதிகாரப்பகிர்வு தொடர்பாக வலியுறுத்தினர்.

2013,நவம்பர், கொழும்பில் நடைபெற்ற பொது நலவாய மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வருகை தந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பு சந்திப்பு சமஷ்டித்தீர்வை வலியுறுத்தல்.

2014 மே 28 ல். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்தியாவில் சந்தித்தார். இதன்போது ஈழத்தமிழர் அரசியல் தீர்வு தொடர்பாக 13, வது திருத்தசட்டத்தில் 13+, உச்ச அதிகாரம் வழங்குவதாக மகிந்த கூறினார். எதுவுமே நடக்கவில்லை.

2015 மார்ச் 13 முதல் 15 வரை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு, அனுராதபுரம், தலைமன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்றார். இதன்போது யாழ்ப்பாணத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு சந்தித்து அதிகாரப்பகிர்வு வலியுறுத்தினர்.

2015 ஆகஸ்ட் 17 தொடக்கம் 2019 நவம்பர் 19 வரை நல்லாட்சி அரசில் இணைக்க அரசியல் காலம், தமிழ்தேசிய கூட்டமைப்பு எதிர்கட்சி தலைவர் பதவியுடன் ஆட்சியின் பங்காளர்களான காலம்.

2016 பெப்ரவரி 05 , 06 ஆகிய திகதிகளில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கொழும்புக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார். அப்போது எதிர்கட்சி தலைவர் இரா சம்மந்தன் மற்றும் தமிழ்தேசிய கூட்டமைப்பு அங்கம் வகித்தவர்களுடன் சந்திப்பு வழமையான அதிகாரபகிர்வு, பேச்சு.

2017,மே,11,12, ல் சர்வதேச வெசாக் தின கொண்டாட்டங்களில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருகை தந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பு சம்பந்தன் தலைமையில் சந்தித்து பேசினர், இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனாவுடன் தாம் 13, வது திருத்தத்தை முழுமையாக அமுலாக்குமாறு அழுத்தம் கொடுத்ததாக மோடி தெரிவித்தார்.

2017 செப்டம்பர் 22 மாகாணசபை தேர்தல் திருத்த சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றம், விகிதாசார தேர்தல் முறை இரத்து, புதிய எல்லை நிர்ணயம், கலப்பு முறை தேர்தல் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஆதரவு.

2018 ஜனவரி 14-17, வரை சட்ட, நீதி மற்றும் மின்னணுவியல் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் இலங்கை வருகை எதிர்கட்சி தலைவர் இரா சம்மந்தன் தலைமையில் தமிழர் தரப்பு சந்திப்பு.

2019 யூன் 09ல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார். வழமை போன்று ஜனாதிபதி மகிந்தவுடன் ஈழத்தமிழர் விடயம் பேசப்பட்டதாக செய்தியில் கூறப்பட்டது.

2019 ஏப்ரல்,21 ல் இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர், இலங்கைக்குப் பயணம் செய்த முதலாவது வெளிநாட்டுத் தலைவர் இவர் ஆவார். எதிர்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் சந்திப்பு. இலங்கைக்குத் தனது ஆதரவையும் நாட்டு மக்களுடன் தோள்நிற்பதையும் வெளிப்படுத்தினார்.

2020 பெப்ரவரி பிரதமராக பதவி ஏற்று மகிந்த ராஜபக்ச இந்தியபயணம் மேற்கொண்டார். வழமையாக ஈழத்தமிழர்களின் அதிகாரப்பகிர்வு குறித்து பேசப்பட்டது.

2022 மார்ச் 28ல் இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டார். கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களை சந்தித்து பொருளாதார உதவிகள் குறித்தும், மாகாணசபை தேர்தல் உடனே நடத்துமாறும் கூறினர்.

2023 ஜனவரி19, 20,ல் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தமிழ்தேசிய கட்சிகளுடைய தலைவர்கள் சந்தித்து மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்துமாறு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வழமையான வாய்ப்பாட்டை கூறினர்.



2024 ஜனவரி 22ல் புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் சந்தித்து பேசினர்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காண இந்தியா தனது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்துப் பேசப்பட்டது.

அதற்கு அவர் கூறியபதில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையின்றிப் பிளவுபட்டு இருப்பது குறித்து இந்தியத் தரப்பு தனது வருத்தத்தைத் தெரிவிக்கிறது ஒற்றுமையாக செயல்படுங்கள் என ஆலோசனை கூறினார்.

2025 ஏப்ரல் 05ல் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தமிழ்தேசிய கட்சிகள் இலங்கையில் பல ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தி, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகச் செயற்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதி அநுராவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2026 ஏப்ரல்19 ல் இந்திய துணை ஜனாதிபதி

தொடர்ச்சி: பக்கம் 13




தீபச்செல்வன்

ஆகஸ்ட் 30. உலகம் முழுவதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் நினைவையும், அவர்களது குடும்பங்களின் நீதிக்கான உரிமையையும் முன்னிறுத்தும் நாள். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நாள் வெறுமனே ஒரு சர்வதேச நினைவு நாளாக இல்லை. பல தசாப்தங்களாகத் தமது பிள்ளைகள், கணவர்கள், சகோதரர்கள், உறவினர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறிய முடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கான குடும்பங்களின் நீடித்த போராட்டத்தை உலகின் முன் மீண்டும் கொண்டு வரும் நாளாகும். இவ்வாண்டு ஆகஸ்ட் 30ஆம் நாளை எதிர்கொள்ளும் இலங்கை, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினையில் இன்னமும் நீதியை வழங்காத நாடாகவே இருக்கிறது.

### துயரத்தை ரீல்ஸாகப் பார்த்த அமைச்சர்

அதைவிடக் கவலைக்குரியது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது நீதிக்கான கோரிக்கையை முன்வைக்கும் இடத்திலேயே அடக்குமுறையை எதிர்கொள்ள வேண்டிய நிலை தொடர்வதாகும். அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மாரும் உறவினர்களும் மாவட்ட செயலகத்துக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர். தமக்குப் பதில்கள் வேண்டும், நீதியே வேண்டும் என்ற கோரிக்கையுடன் நின்ற அவர்களைப் பொலிஸார் இழுத்துச் சென்று அங்கிருந்து வெளியேற்றிய சம்பவம் கடுமையான கண்டனத்தை ஏற்படுத்தியுள்ளது.



அந்தக் காட்சிகள் வெளியே நடந்துகொண்டிருந்த போது, நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மாவட்ட செயலகத்துக்குள் இருந்து தனது கையடக்கத் தொலைபேசியில் போராட்டத்தைப் பார்த்ததாகவும், அதனை வெளிப்படுத்தும் புகைப்படம் சமூக ஊடகங்களில் பரவியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. நீதிக்காக வெளியே நிற்கும் தாய்மார்களைச் சந்திப்பதற்குப் பதிலாக, அவர்கள்மீது இடம்பெறும் பொலிஸ் நடவடிக்கையை உள்ளிருந்து பார்த்துக்கொண்டிருப்பது என்ற குற்றச்சாட்டு, அரசாங்கத்தின் அணுகுமுறை குறித்து தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது.

### தமிழ் கட்சிகள் கண்டனம்

இந்தச் சம்பவத்தைத் தமிழ்த் தேசிய அரசியல் பிரதிநிதிகள் பலரும் கண்டித்துள்ளனர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களையும் தாய்மாரையும் பொலிஸார் பலவந்தமாக வெளியேற்றியதையும், அந்தச் சம்பவத்தை அமைச்சரொருவர் உள்ளிருந்து பார்த்துக் கொண்டிருந்ததையும் கடுமையாகக் கண்டித்துள்ளார். அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளகப் பொறிமுறைகளில் நம்பிக்கையை இழந்துவிட்டதாகவும், சுயாதீன சர்வதேச நீதிப் பொறிமுறையே அவர்களின் கோரிக்கையாக இருப்பதாகவும் அரசியல் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதான் ஆகஸ்ட் 30இன் இலங்கைச் சூழலின் முரண்பாடு. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நாளை அரசு நடத்துகிறது. ஆனால் அந்த நாளின் அடிப்படை அர்த்தமான உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் ஆகியவற்றைக் கோரி அதே அரச நிறுவனத்தின் முன்பாக நிற்கும் தாய்மார்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

### ஐ.நாவின் தீர்மானம்

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் தற்செயலாக உருவான ஒரு தினமல்ல. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் உலகின் பல நாடுகளில் அரசியல் அடக்குமுறைக்கும் அச்சுறுத்தலுக்கும் பயன்படுத்தப்பட்ட வரலாற்றின் பின்னணியில், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 2010 டிசம்பர் 21ஆம் நாள் தீர்மானம் 65/209 மூலம் ஆகஸ்ட் 30ஆம் நாளை சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தினமாக அறிவித்தது. 2011ஆம் ஆண்டு முதல் இந்நாள் உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஒருவரைக் காணாமல் போகச் செய்வதோடு முடிவடையும் குற்றமல்ல. ஒருவர் கைது செய்யப்பட்டாரா, தடுத்து வைக்கப்பட்டாரா, கடத்தப்பட்டாரா என்பதையே மறுத்து, அவர் எங்கே இருக்கிறார், அவருக்கு என்ன நடந்தது என்பதையும் மறைப்பதன் மூலம் அவரைச் சட்டத்தின் பாதுகாப்புக்கு வெளியே தள்ளும் கடுமையான மனித உரிமை மீறலாகும். பாதிக்கப்படுவது காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் வாழ்க்கை மட்டுமல்ல; அவரைத் தேடி வாழும் குடும்பத்தின் வாழ்நாளும் ஆகும்.

### "என் பிள்ளைக்கு என்ன நடந்தது?"

இலங்கைக்கு இந்த நாள் இன்னும் ஆழமான பொருளைக் கொண்டது. வடக்கு, கிழக்கு மட்டுமன்றி தென்னிலங்கையிலும் பல்வேறு காலகட்டங்களில் ஆயிரக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. விசாரணைகள் நடத்தப்பட்டன. வாக்குமூலங்கள் பெறப்பட்டன. பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. ஆனால் ஒரு தாயின் அடிப்படைக் கேள்வியான "என் பிள்ளைக்கு என்ன நடந்தது?" என்பதற்கு இன்னமும் முழுமையான பதில் கிடைக்கவில்லை. ஐக்கிய நாடுகளும் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் பல தசாப்தங்களாகப் பதில்களுக்காகக் காத்திருப்பதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றது.

இலங்கை 2016ஆம் ஆண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது. 2018ஆம் ஆண்டு அதனை உள்நாட்டுச் சட்டமாக்கும் சட்டமும் இயற்றப்பட்டது. காணாமல் போனோர் பற்றிய அலுவலகமும் உருவாக்கப்பட்டது. ஆனால் சட்டங்களும் நிறுவனங்களும் உருவாக்கப்பட்டுள்ளன என்பதே நீதி கிடைத்துவிட்டது என்பதற்கான சான்றல்ல.

### பணமும் மரணச் சான்றிதழும் வேண்டாம்

மாறாக, பல ஆண்டுகளாகப் போராடும் தாய்மார்கள் இப்போது கூட அதே கேள்வியுடன்தான் வீதியில் நிற்கின்றனர். அவர்கள் நிவாரணத்தை மட்டும் கேட்கவில்லை. மரணச் சான்றிதழை மட்டும் கேட்கவில்லை. இடைக்கால நிதியுதவியை மட்டும் கேட்கவில்லை. தங்களுடைய உறவினர் களுக்கு என்ன நடந்தது என்பதற்கான உண்மையையும், அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதற்கான நீதியையும் கேட்கிறார்கள். பணத்தால் ஒரு காணாமல் ஆக்கப்பட்டவரை மீண்டும் உயிருடன் கொண்டுவர முடியாது. மரணச் சான்றிதழால் ஒரு தாயின் கேள்வியை முடித்துவிட முடியாது.

இலங்கையில் கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட உள்ளக ஆணைக்குழுக்கள் மற்றும் விசாரணைப் பொறிமுறைகள் ஏன் நீதி வழங்கவில்லை என்பதற்கும் பதில் தேவை. சாட்சிகள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகள், குடும்பங்கள் கண்காணிக்கப்படுகின்றனர் என்ற அச்சங்கள், போராட்டங்களுக்கு இடையூறு, நீண்டகாலத் தாமதம் ஆகியவை உள்ளக நீதிப் பொறிமுறைகள் மீதான நம்பிக்கையை மேலும் சிதைத்துள்ளன. ஐக்கிய நாடுகளும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் மீதான அச்சுறுத்தல், துன்புறுத்தல் போன்றவை குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

### சர்வதேசப் பொறிமுறையே வேண்டும்

எனவேதான் சர்வதேச விசாரணை அவசியமாகிறது. இது இலங்கைக்கு எதிரான ஒரு அரசியல் கோரிக்கையாக மட்டும் பார்க்கப்படக்கூடாது. நீதியைத் தேடும் குடும்பங்களின் அடிப்படை உரிமையாகவே பார்க்கப்பட வேண்டும். உள்நாட்டு நிறுவனங்கள் உண்மையை வெளிக்கொணரத் தவறிய நிலையில், சுயாதீனமான சர்வதேச நீதிப் பொறிமுறை மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை, பொறுப்புக்கூறல், கட்டளைப் பொறுப்பு, சாட்சிகளின் பாதுகாப்பு, ஆதாரங்களின் பாதுகாப்பு ஆகியவை விசாரிக்கப்பட வேண்டும்.



ஆகஸ்ட் 30 என்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நாள் மட்டுமல்ல. அவர்களை யார் காணாமல் ஆக்கினார்கள் என்ற கேள்வியை எழுப்பும் நாள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்பும் நாள். ஏன் இதுவரை உண்மை சொல்லப்படவில்லை என்ற கேள்வியை எழுப்பும் நாள். அந்த உண்மையை மறைக்கும் ஒவ்வொரு அதிகாரத்திடமும் பொறுப்புக்கூறலைக் கேட்கும் நாள்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக தாய்மார்கள் இழுத்துச் செல்லப்பட்ட காட்சி இன்று ஆளும் ஸ்ரீலங்கா அரசின் முகத்தை நன்றாக வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. நீதிக்காகப் போராடும் தாய்மார்களின் குரலை அடக்குவதன் மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கேள்வியை அடக்கிவிட முடியாது. ஒரு தாயின் கையில் இருக்கும் தனது பிள்ளையின் புகைப்படம் ஒரு அரசாங்கத்துக்கு எதிரான ஆயுதமல்ல. அது அரசாங்கத்திடம் கேட்கப்படும் ஒரு சட்டபூர்வமான கேள்வி. அந்தக் கேள்விக்கு பதில் கிடைக்கும் வரை ஆகஸ்ட் 30 இலங்கையில் ஒரு நினைவு நாளாக மாத்திரம் இருக்காது. அது இன்னமும் நிறைவேறாத நீதியின் நாளாகவே இருக்கும்.

உண்மையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மட்டும் போதாது. உண்மை வேண்டும். உண்மையுடன் நீதி வேண்டும். நீதியுடன் பொறுப்புக்கூறல் வேண்டும். அந்த நீதியை வழங்குவதற்கு இலங்கையின் உள்ளகப் பொறிமுறைகள் தோற்றிருப்பதால், சர்வதேச விசாரணையையே பாதிக்கப்பட்ட மக்கள் கோருகின்றனர்.

• • •




மட்டு.நகரான்

சர்வதேச வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோர் தினம் எதிர் வரும் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. ஒரு சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படுகிறது அடக்கு முறை ஒடுக்குமுறையின் ஒரு வடிவமே வலிந்து காணாமல் ஆக்கப்படுதலாக இருந்து வருகிறது. இந்த வலியை வட கிழக்கு தமிழர்கள் இந்த நாட்டில் அனுபவித்து வந்த தொடர்ச்சியான வலியாக இருந்துவருகின்றது.

சர்வதேச வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினால் சர்வதேசத்தின் கவனத்தினை ஈர்க்கும் வகையிலும் தமது கோரிக்கைகளை சர்வதேசத்தின் மனசாட்சிகளை கேள்விகேட்கசெய்யும் வகையிலும் சர்வதேச மாநாடு ஒன்றினை யாழில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன் பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பேரணி ஆரம்பிக்கப்பட இருக்கிறது. காலையில் 9 மணி போல இந்த பேரணி ஆரம்பிக்கப்பட்டு, தந்தை செல்வா மண்டபத்திற்கு பேரணியாக வந்த பிற்பாடு, இந்த மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரல்கள், நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச மனித உரிமை அமைப்பு கள், ஐநா அலுவலக பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டதாகத் தெரியவருகின்றது.



ஓர் நாட்டின் வரலாற்றில் மறக்க முடியாத வடுக் களுள் ஒன்று மனிதர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படு வதாகும். உலகளவில் மனித உரிமைகள் மீறப்பட்டு, சட்ட விரோதமாகக் கடத்தப்பட்டு, எவ்விதத் தகவலுமின்றி மறைக்கப்படும் மனிதர்களின் நிலையை உலகுக்கு உணர்த்தவும், அவர்களுக்கான நீதியை வலியுறுத்தவுமே ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30-ஆம் நாள் “சர்வதேச வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் தினம்” எனக் கடைப் பிடிக்கப்படுகிறது.

வடகிழக்கு இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இந்நாள் வெறும் நிகழ்வு அல்ல. இது அவர்களின் அன்றாட வாழ்வியலோடு பிணைந்த, ஆறாத வடுவாக இருந்துவரும் ஒரு மாபெரும் நீதி போராட்டத்தின் குறியீடாகும். பல தசாப் தங்களாகத் தொடரும் இந்த அவலத்திற்குத் தமிழ் மக்கள் இன்றும் தகுந்த பதிலையோ நீதியையோ பெறமுடியாமல் தவித்து வருகின்றனர்.

இலங்கையில் பல தசாப்தங்களாக நடைபெற்ற உள் நாட்டுப் போரின் போதும், குறிப்பாக 2009-ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த இறுதி நாட்களிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் முறைப்படி சரணடைந்தவர்கள் மற் றும் கையளிக்கப்பட்ட உறவுகள் பலரின் நிலை இதுவரை என்னவென்று அறிவிக்கப்படவில்லை.

அதேபோல், “வெள்ளை வேன்” கலாசாரம் மூலம் வீடுகளிலிருந்தும், வீதிகளிலிருந்தும் கடத்தப்பட்ட இளை ஞர்கள், மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் எண்ணிக்கையும் மிக அதிகம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் பெரும்பான் மையானோர் குடும்பத்தின் முதன்மைப் பொருளீட்டுபவர்கள் என்பதால், அவர்களின் மறைவு குடும்ப கட்டமைப்பையே சிதைத்துள்ளது. ஆயிரக்கணக்கான தாய்மார்களும், மனை விகளும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் வடகிழக்கில் உள்ள பெரும்பாலான குடும்பங்கள் உளவியல் ரீதியாகவும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. வடகிழக்கு இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் தெருவில் இறங்கிப் போராடத் தொடங்கி பல ஆண்டுகள் கடந்துவிட்டன. வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வீதிப் போராட்டங்களை தாய்மார்களும் உறவுகளும் அடக்கு முறைகள், மழை, வெயில் என எந்தப் வேறுபாடும் இன்றி இடைவிடாது முன்னெடுத்து வந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்,தடுப்பு முகாம்கள் பற்றிய விவரங்களை பகிரங்கப்படுத்த வேண்டும், மற்றும் சர்வதேசத்தின் நேரடி மேற்பார்வையிலான சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே இப்போராட்டங்களின் முதன்மையான கோரிக்கைகளாகும். உள்நாட்டு ஆணைக்குழுக்கள் பல அமைக்கப்பட்ட போதிலும், அவைகள் பாதிக்கப்பட்ட மக் களுக்குத் தேவையான நம்பிக்கையையோ அல்லது உண்மையான நீதியையோ வழங்கத் தவறிவிட்டன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இலங்கையின் நிலைமை குறித்து பலமுறை கவலை தெரிவித்துத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. இருப்பினும், பாதிக் கப்பட்ட மக்களுக்கு இன்னும் உறுதியான தீர்வுகள் கிடைக் கவில்லை என்பதே உண்மை.

இந்த நிலையில் சர்வதேச வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினால் ஒருங்கி ணைக்கப்படும் சர்வதேச மாநாடுகள் இப்போராட்டத்தின் முக்கிய திருப்புமுனையாக அமைகின்றன. மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சர்வதேசச் சட்ட வல்லுநர்கள், புலம் பெயர் தமிழ் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நாடுகளின் கவனத்தை ஒரே தளத்தில் ஈர்ப்பதே இம்மாநாடுகளின் முதன்மை நோக்கமாகும்.

இம்மாநாடுகளில் போரினாலும் கடத்தல்களினா லும் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் மற்றும் மனைவிகளின் நேரடிச் சாட்சியங்கள் உலகரங்கில் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேச நீதி மன்றம் ஊடாகப் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்களுக்கு முன்னதாக வலுவான கோரிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

உள்நாட்டு பொறிமுறைகள் மீது நம்பிக்கை இல்லாததால், சர்வதேசத்தின் நேரடி மேற்பார்வையி லான விசாரணையைத் தீவிரப்படுத்துவது இம்மாநாட்டின் முதன்மைக் கோரிக்கையாகும். மேலும், குற்றமிழைத்தவர் கள் மீது சர்வதேச மட்டத்தில் தடைகளை விதித்து அவர் களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதுடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்குத் தொடர்ந்து வழங்கி வரப்படும் அச்சுறுத்தல்களை நிறுத்தி அவர்களுக் கான பாதுகாப்பையும் உறுதி செய்ய வலியுறுத்தப்படுகிறது.

சர்வதேச வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் தினமும், அதனை ஒட்டி நடத்தப்படும் சர்வதேச மாநாடும் தமிழ் மக்களின் நீண்டகால நீதிப் போராட்டத்திற்குப் புதிய பரிமாணத்தையும் சர்வதேச அங்கீகாரத்தையும் வழங்கி வருகின்றன. உண்மை வெளிவந்து, தகுந்த நீதி கிடைக்கும் வரை பாதிக்கப்பட்ட தமிழ் உறவுகளின் இப்போராட்டம் தொடரும் என்பதையே இம்மாநாடுகள் உலகுக்கு உரக்கச் சொல்கின்றன.

நீதிக்கான நீள் பயணம்” நீண்டகாலமாக எங்க ளுக்கு நீதி கேட்டு நீண்டகாலமாக பயணித்துக் கொண்டிருக் கின்ற தமிழ் தாய்மார்களின் அனைத்துலக மாநாடு தங்களுடைய அன்பானவர்களைத் தேடி இறந்த தாய்மார்கள் 600-க்கும் மேற்பட்டோர் இதுவரைக்கும் இறந்திருக்கிறார்கள். அவர்களுடைய சாட்சியப் புத்தகமாக, “அளிக்கப்பட்ட சாட்சியங்கள்” எனும் பெயரில் அந்தப் புத்தக வெளியீடும், அந்த குடும்பங்கள் அந்த தாய்மாரை மதிப்பளிக்கும் ஒரு நிகழ்வும் அந்த மாநாட்டில் முக்கிய அம்சமாக இருக்கின்றது.

இந்த நிலையில் இந்த மாநாட்டினை குழப் பும் வகையிலான செயற்பாடுகளும் வடகிழக்கில் முன் னெடுக்கப் பட்டுவருவதாகவும் அறியமுடிகின்றது. ஒன்றுபட்டு முன்னெடுக்கும் எந்த போராட்டமும் எந்த கோரிக்கையுமே வலுவான வெற்றியைத்தரும்.ஆனால் ஆதிக்க சக்திகளின் கைகளுக்குள் அகப்பட்டுள்ளவர்கள் தங்களது சுயதேவைக்காக முன்னெடுக்கும் செயற்பாடு ஒட்டுமொத்த வலியையும் சுமந்துநிற்கும் தாய்மார்களின் போராட்டத்தினை நிலையினை நிலைகுலையச்செய்து விடும் நிலையேற்படும்.



தமிழ் உறவுகளின் இத்தகைய சர்வதேச ரீதியான நகர்வுகளையும், அவர்களின் நீதி போராட்டத்தையும் பலவீனப்படுத்தும் நோக்கில் பல்வேறு குழப்பும் வேலைத் திட்டங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இப்போராட்டத்தின் வீரியத்தைக் குறைப்பதும், சர்வதேச சமூகத்தின் பார்வையில் இதைக் கொச்சைப்படுத்துவதும் இவ்வாறான தடைகளின் முதன்மை நோக்கமாகும்.

பாதிக்கப்பட்ட உறவுகளின் சங்கப் பிரதிநிதிகளி டையே தேவையில்லாத பிரிவினைகளையும் சந்தேகங் களையும் உருவாக்குவது, இப்போராட்டத்தைக் குழப்பும் வேலைத்திட்டங்களின் முக்கிய உத்தியாக உள்ளது.

அத்துடன், மாநாடுகள் நடைபெறும் காலகட்டங்க ளில் மாற்று நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது, பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்வது மற்றும் சங்கத்தின் தலைமைகளுக்கிடையே பிளவுகளை ஏற்படுத்த முயற்சிப் பது போன்ற செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இத்தகைய செயல்கள், சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் கோரிக்கைகள் ஒரே குரலாக ஒலிப்பதைத் தடுத்து, நீதிக்கான பயணத்தைத் தாமதப்படுத்தவே வழி வகுக்கின்றன.

மேலும், அரச புலனாய்வுத்துறை மற்றும் அரசு சார்ந்த அமைப்புகளின் மறைமுகக் தலையீடுகள், அச்சுறுத் தல்கள் மூலமும் இம்மாநாடுகளின் நம்பகத்தன்மை யைக் குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், இத்தனை தடைகள், சதித்திட்டங்கள் மற்றும் குழப்ப முயற்சிகளையும் தாண்டி, வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட தமிழ் உறவுகள் தங்கள் அன்பிற்குரியவர்களுக்கான உண்மை யையும் நீதியையும் கண்டறியும் வரை, தங்கள் அறப்போராட்டத்தையும் சர்வதேச ரீதியான முன்னெடுப்பு களையும் உறுதியுடன் தொடர்வார்கள் என்பதே நிதர்சனமாகும்.

• • •




கலாநிதி. இ.ஸ்ரீஞானேஸ்வரன்

பன்னாடுகளைக் கையாளும் சிறிலங்காவின் தந்திரோபாயமானது ஒரு பன்னாட்டு உடன்பாட்டால் மிகச் சவாலுக்கு உட்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் எதிர்வரும் வாரங்களில் சிறிலங்காவிற்கு வருகிறார் என்பதும் 2025 ஏப்ரலில் பாதுகாப்புக்கென இவ்விரு நாடுகளிடையேயும் மேற்கொள்ளப்பட்ட "ஒட்டுமொத்த கட்டமைப்பு உடன்பாடு" அல்லது "பல்வேறு ஒத்துழைப்புகளை உள்ளடக்கும் விரிவான புரிந்துணர்வு உடன்பாடு" என்ற வகையில் செய்யப்பட்ட பாதுகாப்பு உடன்பாட்டை இயங்குநிலைக்குக் கொண்டுவருவதே இவ்வருகையின் முக்கிய நோக்கமென சிறிலங்காவின் செய்தி ஊடகங்கள் (1) வெளிப்படுத்தியிருக்கின்றமையும் சிறிலங்கா எதிர்கொள்ளும் சவாலைக் கட்டியம் கூறுகின்றன.

பூகோளப் போட்டியில் பன்னாடுகளைக் கையாள்வதற்கு சிறிலங்கா பயன்படுத்தும் உத்தியை இங்கு கருத்திற்கொண்டால் சிறிலங்காவின் மீதான பூகோளப் போட்டிக்கான பங்குதாரர்களை முறையே இந்தியா, சீனா, அமெரிக்க-மேற்குலகும் என மூன்றாக வகுத்து இந்த மூன்று முனைகளின் தேவைகளைத் தனது தேவைகளுடன் சமப்படுத்துவதன் ஊடாக சிறிலங்கா ஒரு சமநிலை உத்தியை பின்பற்றிவருகின்றது.

ஒரு நாடு அல்லது அரசியல் தரப்பு, தன்னைவிட வலிமையான அல்லது போட்டியிடும் பல்வேறு சக்திகளுடன் உறவுகளைப் பேணிக்கொண்டு, எந்த ஒரு சக்தியின் மீதும் முழுமையாகச் சார்ந்துவிடாமல் தனது அரசியல் மற்றும் மூலோபாய சுயாதீனத்தைப் பாதுகாக்கும் அணுகுமுறையினையே சமநிலை மூலோபாயம் (Balancing Strategy) எனப் பன்னாட்டு உறவுகள் தொடர்பான கற்கைகள் வரையறுக்கின்றன. (2)

இந்தச் சமநிலை மூலோபாயமே சிறிலங்காவின் துருப்புச் சீட்டாக இன்றுவரை பயன்பட்டு வருகின்றது. இத்துருப்புச் சீட்டை மிக இலாவகமாகப் பயன்படுத்தி உச்சப்பெறுபேறுகளைச் சிறிலங்காவிற்குக் குவித்ததால்தான்இலக்ஸ்மன்கதிர்காமர்இலக்குவைக்கப்பட்டார் என்பதையும் இங்கு நினைவிற்கொள்வது சாலப் பொருந்தும்.


சிறிலங்காவைப் பொறுத்தவரையில் போட்டி சூழ்ந்திருந்த உலகில் இந்தியாவுடன் பாதுகாப்பு, வலு மற்றும் முதலீடுகள் தொடர்பாகவும் சீனாவுடன் உட்கட்டுமானம், முதலீடு, கடன் கட்டமைப்பு தொடர்பாகவும் மேற்குலகுடன் வணிகம், முதலீடு, கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாகவும் சமநிலை மூலோபாயத்தினைப் பயன்படுத்தி அதனை வெற்றிகரமாகக் கையாண்டு வந்தது.

எனினும் தற்போது உலகம் போட்டியிலிந்து போரைநோக்கி நகரும் போக்கில் இந்த சமநிலை மூலோபாயம் தொடர்ந்து தக்கவைக்க முடியாத மூலோபாயமாக மாறியுள்ளதாகத் தெரிகிறது. அவ்வாறு தக்கவைக்க முடியாதென்பதை கட்டியம்கூறும் உடன்பாடாகவே கடந்த 2025 இந்தியா சிறிலங்காவுடன் மேற்கொண்ட பாதுகாப்பு உடன்பாட்டைக் காணமுடியும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த உடன்பாடானது ஒரு "குடைகீழ் உடன்பாடாகவே – Umbrella Agreement" வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குடைகீழ் என்பதை "ஒட்டுமொத்த கட்டமைப்பு உடன்பாடு" அல்லது "பல்வேறு ஒத்துழைப்புகளை உள்ளடக்கும் விரிவான புரிந்துணர்வு உடன்பாடு" எனப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த உடன்பாட்டின் உள்ளடக்கங்களைப் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இந்தியாவோ சிறிலங்காவோ உத்தியோபூர்வமாக வெளிப்படுத்தாத நிலையில் எக்னொமிநெக்ஸ்ட் என்ற பன்னாட்டுச் செய்தித்தளமொன்று அவ்வொப்பத்தத்தின் உபவிதிகளுட்படப் பிரதான அகவிதிகளை வெளிப்படுத்தியிருந்தது. (3)

இத்தகவல்கள் வெளியாகியவுடன் சிறிலங்காவின் சனாதிபதி அனுரகுமார திசாநாயக்க உடன்பாட்டின் உள்ளடக்கத்தை நாடாளுமன்றில் வெளிப்படுத்துவோம் என அறிக்கை விட்டிருந்தார்.

இதுவொரு உடன்பாடு (Memorandum of understading – MOU) என்ற அடிப்படையில் உடன்பாட்டில் ஈடுபட்ட எந்தவொரு தரப்பையும் கட்டுப்படுத்தும் வலுக்கொண்டதல்ல என்பதே வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவலாகும். அத்துடன் இந்த உடன்பாட்டிலிருந்து எந்தவொரு தரப்பும் மூன்றுமாத முன்னறிவித்தலுடன் வெளியேற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றமையானது இரு நாடுகளினதும் இறையாண்மையின் மீது எவ்வித அழுத்தங்களையும் இவ்வுடன்னபாடு பிரயோகிக்கவில்லை என்ற தேற்றப்பாட்டை உருவாக்கியுள்ளது. என்றாலும் இராசதந்திர உறவுக்கப்பால் மூலோபாய உறவுக்கான உடன்பாடாகவே அவதானிக்கும் போது உட்கிடையான அர்த்தங்கள் மேற்சொன்னவற்றிற்கு எதிராக இருப்பதைக் காணலாம்.




இராசதந்திர உறவென்பது நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை, உறவுகளைப் பேணுதல், சமரசம், அரசியல் தொடர்புகள் போன்றவற்றைக் குறித்து நிற்க நீண்டகாலப் பாதுகாப்பு, அதிகாரச் சமநிலை, தேசிய நலன், பிராந்திய ஆதிக்கம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மூலோபாய உறவுகள் குறித்து நிற்கின்றன.

மூலோபாய உறவின் மிக முக்கிய சரத்தொன்றாக இவ்வுடன்பாட்டில் அகவிதி 1 உபவிதி 3 (1.3) இனைக் காணலாம். எந்தவொரு தரப்பும் தனது பிராந்தியத்தை மற்றைய தரப்பின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் பயன்பாட்டுக்கு அனுமதிக்கக் கூடாது (Neither Party shall allow the use of its territory for activities harmful to the national security of the other) என்ற விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வுடன்பாட்டில் எந்தவொரு இடத்திலும் ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான மற்றைய நாட்டின் நடவடிக்கைகள் எவையெனக் அறுதியாகக் குறிப்பிடப்படவில்லை. இதனால் இந்த அகவிதியானது மூலோபாய உறவின் முக்கிய புள்ளியாக மாறுகின்றது.

அதாவது தனது நீண்டகாலப் பாதுகாப்பையும் அதிகாரச் சமநிலையையும் பிராந்திய ஆதிக்கத்தையும் கருத்திற்கொள்ளும் ஒரு தரப்பு மற்றைய தரப்பின் எந்தவொரு நடவடிக்கையையும் இந்த அகவிதியின் கீழ்கொண்டு வருவதற்கான சாத்தியங்களைக் காணலாம்.

இப்போது அதிகாரச் சமநிலை மற்றும் பிராந்திய ஆதிக்கம் என்ற இருவிடயங்களை எடுத்து நோக்கினால் வறிதாகிப்போய் மெதுவாக அத்தாக்கத்திலிருந்து வெளியேறிவரும் சிறிலங்கா இவ்விரு சொற்றொடர்களையும் தனது அகராதியில் காண்பதற்கே நூற்றாண்டுகளைத் தாண்டவேண்டியுள்ளது. எனில் மற்றைய தரப்பான இந்தியாவே இந்த உடன்பாட்டினூடாக தனது மூலோபாய வெற்றியைத் தக்கவைத்துள்ளது என்பது கண்கூடு.

2022 ஒகஸ்ட்டில் சீனாவின் யுவான் வாங்-5 என்ற "விண்வெளி ஆராய்ச்சி, ஏவுகணை கண்காணிப்பு, மின்னணு/மூலோபாய உளவுத் தகவல் சேகரிப்பு" ஆகிய மூன்று பரிமாணங்களைக் கொண்ட இரட்டை பயன்பாட்டுத் திறன் (dual-use capability) கப்பல் சிறிலங்காவில் நங்கூரமிடுவதனை இந்தியா தனது இராசதந்திர தொடர்புகளின் மூலம் எதிர்த்திருந்தது. எனினும் அந்த இரசதந்திர முயற்சி தோல்வியடைய அக்கப்பல் சிறிலங்காவில் தரித்து நின்று ஆராய்ச்சிகளை மேற்கொண் டிருந்தது.



இந்த இராசதந்திரத் தோல்வியினை மீண்டும் எதிர்கொள்ளாதிருக்க இந்த பாதுகாப்பு உடன்பாட்டின் ஊடாக இந்தியா மூலோபாய உறவைக் கட்டியெழுப்பியுள்ளது என்று முடிவெடுக்கலாம். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான கப்பல்களின் வருகையுட்பட இந்தியா எவற்றையெல்லாம் தனது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென வரையறுக்கின்றதோ அவற்றையெல்லாம் தடுப்பதற்கு இந்த உடன்பாடு வழிசமைக்கின்றது.

இதனடிப்படையில் இவ்வுடன்பாட்டின் விதி 1.3 எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது தெள்ளத் தெளிவாகின்றது. இத் தெளிவை முன்வைத்து நாடொன்றின் இறையாண்மையை கருத்திற்கொண்டால் இறையாண்மையின் சுதத்திரத்தன்மையின் மீதான ஊறுபாட்டை விளங்கிக்கொள்ளலாம். இதனை ஆழமாக உற்று நோக்கும் போது சிறிலங்காவின் சமநிலை மூலோபாயம் சார்புநிலை மூலோபாயமாக மாறத்தொடங்கியிருப்பது தெளிவாகும்.

தப்பிக்கொள்வதற்காக உடன்பாட்டிலிருந்து சிறிலங்கா வெளியேறுமாக இருந்தாலும் அதுவும் சிறிலங்காவைச் சமநிலை மூலோபாயத்திலிருந்து சார்புநிலை மூலோபாயத்திற்கே தள்ளும்.

1. **https://www.newsfirst.lk/2026/08/25/indian-defence-minister-rajnath-singh-to-visit-sri-lanka-in-september**
2. **https://researchcentre.trtworld.com/dictionary/strategic-balancing/**
3. **https://www.newswire.lk/2026/08/25/indian-defence-minister-rajnath-singh-to-visit-sri-lanka-in-september**
4. **https://economynext.com/sri-lankas-defence-cooperation-mou-with-india-220788/**

• • •




**மருதன் ராம்**

இலங்கை 2030 ஆம் ஆண்டிற்குள் ஏற்றுமதி வருவாயை 36 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால், நாட்டின் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் பிரதான தூண்களில் ஒன்றான மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் நாட்டின் உழைக்கும் வர்க்கமும் இன்னும் 1940களின் காலாவதியான சட்டங்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். அரசாங்கத்தின் இந்த ஏற்றுமதி இலக்கானது, உடனடியாக ஒரு நவீன வேலைவாய்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தாவிட்டால் அது “1940களின் தொழிலாளர் இயந்திரத்தின் மீது ஓய்வெடுக்கும் பளபளப்பான சிறுபுத்தகம்” ஆக மாறும் அபாயம் உள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணியின் சர்வதேச விவகாரங்களுக்கான துணைத் தலைவர் பரத் அருள்சாமி கடுமையாக எச்சரித்துள்ளார்.



இந்த விடயம் குறித்து தொடர்ச்சியான கள ஆய்வை முன்னெடுத்து வரும் அவர், விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் 2030 ஆம் ஆண்டுக்குள் உலகப் பொருளாதாரப் போட்டியில் இலங்கையை பங்கேற்க வைக்க விரும்புகிறது. ஆனால், முதலாளிகளும் தொழிலாளர்களும் 1941 இன் குறைந்தபட்ச ஊதியக் கட்டளைச் சட்டம், 1942 இன் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம், 1950 இன் தொழிற்தகராறுகள் சட்டம், 1954 இன் கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டம் போன்ற பல தசாப்தங்கள் பழமையான சட்டங்களாலேயே இன்னும் நிர்வகிக்கப்படுகிறார்கள் என்று பரத் அருள்சாமி சுட்டிக்காட்டுகிறார். குறிப்பாக “தேசிய வேலைவாய்ப்பு உத்தி (national employment strategy) இல்லாத ஒரு தேசிய ஏற்றுமதி உத்தி என்பது வெறும் ஊடக அறிக்கை மட்டுமே. ஆட்சி மாற்றம் என்பது இரண்டு ஆண்டு கால இடைநிறுத்தப் பொத்தானாக (pause button) மாற முடியாது.

என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கம் பதவியேற்று நீண்ட காலம் ஆகியும் ஒருங்கிணைந்த தொழிலாளர் சீர்திருத்த வரைவையோ அல்லது வெளிப்படையான சட்ட கால அட்டவணையையோ வெளியிடவில்லை. முந்தைய அரசு தயாரித்த வரைவில் தவறுகள் இருந்தால் அதைச் சரிசெய்ய தற்போதைய அரசிற்கு உரிமை உண்டு, ஆனால் சீர்திருத்தப் பணிகளையே புதைத்துவிடக் கூடாது என்பது அவரது கருத்தாகும். அருள்சாமியின் கள ஆய்வின்படி, நாட்டில் தொழிலாளர் தொடர்பான 44 சட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 17 சட்டங்கள் முதன்மையானவை. இந்தத் துண்டாடப்பட்ட சட்ட அமைப்பு முதலாளிகளைக் குழப்புவதுடன், தொழிலாளர்களுக்கான நீதியைத் தாமதப்படுத்தி சட்ட அமுலாக்கத்தையும் பலவீனப்படுத்துகின்றமை தெரியவந்துள்ளது.

### தோட்டத்துறையில் மனித உரிமை மீறல்கள்

மலையகப் பகுதிகளில் குறிப்பாக தனியார் தோட்டங்களில் நிலவும் மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கைக்கான ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே பிரான்சே உடனான சந்திப்பிலும் கலந்துரையாடப்பட்டதாகக் குறிப்பிட்ட பரத் அருள்சாமி, சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையையும் சுட்டிக்காட்டியுள்ளார். காலி மற்றும் மாத்தறை பகுதிகளில் உள்ள 45 தனியார் தோட்டங்கள் மற்றும் சிறுதோட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் தொழிலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகள், சம்பளம் தடுத்து வைக்கப்படுதல், கடன்பாட்டு அடிமைத்தனம் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் ஆகியவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் “கட்டாய உழைப்புக்கான” குறிகாட்டிகளைப் பூர்த்தி செய்வதாகக் கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் கட்டாய உழைப்பினால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான சுங்கப் பரிசோதனையை வலுப்படுத்தும் இலங்கை, தனது சொந்த நாட்டின் தோட்டங்களில் நிலவும் இத்தகைய குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீன விசாரணை நடத்தாமல் புறக்கணிக்க முடியாது என்று பரத் அருள்சாமி வலியுறுத்துகிறார். 1990களில் சுமார் 300,000 ஆக இருந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது 100,000 ஆகக் குறைந்துள்ளது.

இதில் தீவிரமாகப் பணியாற்றும் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள் 72,000 மட்டுமே என அருள்சாமி மதிப்பிடுகிறார். 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 49.2% ஆக மட்டுமே உள்ள நிலையில், வேலை செய்யும் வயதில் உள்ளவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பொருளாதாரச் செயல்பாட்டிற்கு வெளியே இருக்கும்போது குறைந்த வேலையின்மை விகிதத்தைக் கொண்டாடுவது அர்த்தமற்றது.

அதேபோன்று, தோட்டத்துறையில் அறிமுகப்படுத்தப்படும் தன்னிச்சையான “வருவாய் பகிர்வு மாதிரிகள்” (Revenue-sharing models) தொழிலாளர்களின் பாதுகாப்பை சீர்குலைக்கும் “மறைமுக முறைசாரா தொழிலாளர் முறையாக (disguised informalisation)” மாறக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார். இதன் மூலம் ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதி என்பன பறிபோகும் சூழல் நிலவுவதாக பரத் அருள்சாமி கூறியுள்ளார்.



இதுதவிர, விடுமுறை மற்றும் மகப்பேறு கால பாதுகாப்புகள் இல்லாமற்போதல், கூட்டுப் பேரம் பேசும் உரிமை மற்றும் பணிநீக்க பாதுகாப்புகள் இழக்கப்படுதல், நிறுவனத்தின் அனைத்து வணிக அபாயங்களும் தொழிலாளி மீது சுமத்தப்படுதல் போன்ற பாதக விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். “உற்பத்தித்திறன் சீர்திருத்தம் அவசியம்தான். ஆனால் செயல்திறன் என்ற பெயரில் நிறுவனத்தின் வணிக அபாயங்கள் அனைத்தையும் தொழிலாளி மீது மாற்றுவது நீதியாகாது.” என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கை 2024 இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகை மூலம் சுமார் 139 மில்லியன் யூரோ வரி விலக்குகளைப் பெற்றுள்ளது. ஆனால், இதற்காக திருத்தப்பட்ட கட்டமைப்பின் கீழ் 32 சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் ILO தரநிலைகளின் அடிப்படையில் இலங்கை மதிப்பீடு செய்யப்படும். “GSP+ என்பது தர்மம் அல்ல. அது சட்ட இணக்கப்பாட்டிற்கான பலனாக கிட்டும் விடயமாகும். சட்ட அமுலாக்கம் பலவீனமாக இருந்தால் வெறும் அங்கீகாரச் சான்றிதழ்கள் சர்வதேச சந்தை அணுகலைப் பாதுகாக்காது”

“அதேபோன்று, பிராந்திய விரிவான பொருளாதார கூட்டுறவு கூட்டமைப்பில் (RCEP) இணைவது மட்டுமே தானியங்கி பொருளாதாரத் தீர்வாகாது எனக் கூறும் அருள்சாமி, “RCEP என்பது ஒரு நுழைவாயில், அது ஒரு தொழிற்சாலை அல்ல. இலங்கையிடம் போட்டித்தன்மை வாய்ந்த பொருட்கள் இல்லையெனில், நமது உற்பத்தியாளர்கள் வெளியே நிற்க இறக்குமதிகள் மட்டுமே உள்ளே நுழையும்” என்று குறிப்பிடுகிறார். இந்த அடிப்படையில், பரத் அருள்சாமி சில அவசரக் கோரிக்கைகளையும் அரசிடம்




உண்மைத்துள்ளார்.

இதன்படி, தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை மாதம் 30,000 ரூபாயாக உயர்த்தியதும், பணியிட துன்புறுத்தலுக்கு எதிரான ILO மாநாடு 190ஐ அங்கீகரித்ததும் மட்டும் போதுமானவை அல்ல. சில முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புச் சட்டம் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். நிரந்தர, தற்காலிக, ஒப்பந்த மற்றும் தொலைநிலைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பெயர்த்தகு சமூக பாதுகாப்பு, டிஜிட்டல் ஊதியப் பதிவுகள் மற்றும் நவீன தொழில்சார் பாதுகாப்பு விதிகள், தோட்டப் பகுதிகளில் வலுவான மற்றும் முறையான தொழிலாளர் பரிசோதனைகள், தோட்டத் தொழிலாளர்கள் எளிதாகப் பயன்படுத்தி தீர்வுகளைப் பெறக்கூடிய தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலான புகார் அளிப்பு வழிமுறைகள்.

இணையவழி பாதுகாப்புச் சட்டத்திற்கு மாற்றாக ஒரு முழுமையான இணையப் பாதுகாப்புச் சட்டம் (Cyber Security Act) போன்றன அதில் உள்வாங்கப்பட வேண்டும் என்றும் ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணியின் சர்வதேச விவகாரங்களுக்கான துணைத் தலைவர் பரத் அருள்சாமி சுட்டிக்காட்டியுள்ளார். தேயிலை பறிப்பவர், ஆடை தைப்பவர், இறப்பர் பதப்படுத்துபவர், படகு கட்டுபவர் அல்லது ஏற்றுமதி சேவைகளை குறியீடு செய்பவர் என அனைவரும் இலங்கையின் அந்நியச் செலாவணியையே ஈட்டித் தருகிறார்கள். டொலரைச் சம்பாதிக்கும் கையைப் பாதுகாப்பதில் இருந்தே உண்மையான பொருளாதார தேசபக்தி தொடங்குகிறது. என்று பரத் அருள்சாமி சுட்டிக்காட்டுகிறார். இலங்கை 2030 இன் ஏற்றுமதிக்கனவை அடைய வேண்டுமானால், மலையகத் தொழிலாளர்களையும் நாட்டின் உழைக்கும் வர்க்கத்தையும் 1940களின் சட்டக் கூண்டிற்குள் பூட்டி வைக்காமல், அவர்களின் உரிமைகளை உறுதிசெய்யும் நவீன தொழிலாளர் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

• • •

# அவர்கள் எங்கே?

**தமிழீழத்தில் /இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான / வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உலகளாவிய ஆவணப்படுத்தல் திட்டம்.**

**அவர்கள் எங்கே?** என்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களையும், அவர்களைத் தொடர்ந்து தேடி வரும் குடும்பங்களையும் பற்றிய ஓர் அழியாத வரலாற்றுப் பதிவை உருவாக்குவதற்கான ஆவணப்படுத்தல் திட்டமாகும்.

தமிழ் ஏதிலிகள் கழகம்
Tamil Refugee Council

பல தசாப்தங்களாக, இலங்கையில் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் அன்புக்குரியவர்களை குடும்பங்கள் தேடி வருகின்றன.

சிலர் கைது செய்யப்பட்ட பின்னரோ அல்லது தடுப்புக்காவலில் இருந்தபோதோ காணாமல் போனார்கள். சிலர் வீடுகளில் இருந்தோ அல்லது சோதனைச் சாவடிகளில் இருந்தோ அழைத்துச் செல்லப்பட்டார்கள். மற்றவர்கள் அரசு அதிகாரிகளின் காவலில் இருந்தபோதோ அல்லது சரணடைந்த பின்னரோ கடைசியாகக் காணப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு, தங்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது அல்லது அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதற்கான உண்மையான பதில் இன்னும் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு புள்ளிவிவரத்திற்குப் பின்னாலும் ஒரு மனிதர் இருக்கிறார்
**ஒரு பெயர், ஒரு முகம், ஒரு குடும்பம், ஒரு வாழ்க்கை.**

**தமிழீழத்திலும் உலகம் முழுவதிலும் வாழும் குடும்பங்களையும் உறவினர்களையும், காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் அன்புக்குரியவர்கள் பற்றிய தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நண்பர்கள், சாட்சிகள் மற்றும் நம்பகமான தகவல்களைக் கொண்டுள்ள பிறரும் இதில் பங்களிக்கலாம்.**

## இத்திட்டம் சேகரிக்கும் தகவல்கள்:

**அடையாளங்கள்:** பெயர்கள், புகைப்படங்கள், வயது மற்றும் தொழில் விவரங்கள்.

**காலமும் இடமும்:** காணாமல் ஆக்கப்பட்ட தோராயமான தேதிகள் மற்றும் இடங்கள்.

**சூழ்நிலைகள்:** அவர்கள் எவ்வாறான சூழ்நிலையில் (கைது, கடத்தல், சரணடைதல் அல்லது சோதனைச் சாவடி) காணாமல் போனார்கள் என்ற விவரங்கள்.

**நீதிக்கான தேடல்கள்:** இதுவரை மேற்கொள்ளப்பட்ட சட்டப் போராட்டங்கள், காவல் துறைப் புகார்கள் அல்லது சர்வதேச அமைப்புகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்.

**குடும்பச் சாட்சியங்கள்:** குடும்பத்தினரின் நேர்காணல்கள், நினைவுகள் மற்றும் உங்களிடம் உள்ள பிற நம்பகமான தகவல்கள்.

**உங்களிடம் ஒவ்வொரு விவரமும் இருக்க வேண்டிய அவசியமில்லை**
பெயர், புகைப்படம், தோராயமான தேதி அல்லது சம்பவத்தின் ஒரு பகுதி மட்டுமே இருந்தாலும், உங்களுக்குத் தெரிந்த தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பங்கள் அனுமதி அளிக்கும் பட்சத்தில், சேகரிக்கப்படும் தகவல்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அடையாளங்களையும் நினைவுகளையும் பாதுகாக்க உதவுவதோடு, காலப்போக்கில் எளிதில் அழிக்க முடியாத ஒரு வரலாற்றுப் பதிவையும் உருவாக்கும்.

**இந்தத் திட்டம் எண்களைப் பற்றியது மட்டுமல்ல; மனிதர்கள்!**

- ஒவ்வொரு காணாமல் ஆக்கப்பட்டவரும் ஒரு தனிநபராக நினைவுகூரப்படுவதை உறுதி செய்வது.
- எதிர்காலத் தலைமுறைகளுக்காகச் சாட்சியங்களையும் குடும்பங்களின் குரல்களையும் பாதுகாப்பது.
- உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொடர்ச்சியான கோரிக்கையை வலுப்படுத்துவது

**உண்மை. நீதி. பொறுப்புக்கூறல்.**

**திட்டம் தொடங்கும் நாள்**
**30 ஆகஸ்ட்**
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினம்

**தலைமுறை கடந்தும் இந்த உண்மைகள் அழியாமல் இருக்க**
**ஒருவர். ஒரு வரலாறு. ஒரு பதிவு.**

பதில்கள் கிடைக்கும் வரை, நாங்கள் தொடர்ந்து கேட்போம் **அவர்கள் எங்கே?**


WHERE
ARE THEY?
A Global Documentation Project
for Tamil Eelam's Disappeared
and Enforced Disappeared.
WHERE ARE THEY?
IS A DOCUMENTATION PROJECT CREATED TO
BUILD A LASTING RECORD OF THOSE WHO
DISAPPEARED AND THE FAMILIES WHO
CONTINUE TO SEARCH FOR THEM.
தமிழ் ஏதிலிகள் கழகம்
Tamil Refugee Council
FOR DECADES, FAMILIES HAVE SEARCHED FOR LOVED ONES
WHO WERE FORCIBLY DISAPPEARED IN SRI LANKA.
SOME DISAPPEARED AFTER ARREST OR DETENTION. SOME WERE TAKEN
FROM THEIR HOMES OR AT CHECKPOINTS. OTHERS WERE LAST SEEN IN
THE CUSTODY OF STATE AUTHORITIES OR AFTER SURRENDERING.
FOR THOUSANDS OF FAMILIES, THERE HAS STILL BEEN NO TRUTHFUL
ANSWER ABOUT WHAT HAPPENED TO THEM OR WHERE THEY ARE.
BEHIND EVERY STATISTIC IS A HUMAN BEING
A NAME, A FACE, A FAMILY AND A LIFE.
WE ARE ASKING FAMILIES AND RELATIVES LIVING IN TAMIL EELAM AND ACROSS THE WORLD
TO SUBMIT INFORMATION ABOUT THEIR DISAPPEARED LOVED ONES.
FRIENDS, WITNESSES AND OTHERS WITH RELIABLE INFORMATION MAY ALSO CONTRIBUTE.
THE PROJECT WILL COLLECT
Names and photographs
Dates and locations
Circumstances of disappearance
Family testimony and other available information
YOU DO NOT NEED TO HAVE EVERY DETAIL.
Even if you have only a name, photograph,
approximate date or part of the story,
we encourage you to submit what you know.
WHERE FAMILIES GIVE PERMISSION,
THE INFORMATION COLLECTED WILL HELP
PRESERVE THE IDENTITIES AND STORIES OF
THE DISAPPEARED AND CREATE A RECORD
THAT CANNOT SIMPLY BE ERASED WITH TIME.
THIS PROJECT IS ABOUT MORE THAN NUMBERS.
IT IS ABOUT ENSURING THAT EVERY DISAPPEARED PERSON
IS REMEMBERED AS AN INDIVIDUAL.
IT IS ABOUT PRESERVING EVIDENCE AND FAMILY TESTIMONY
FOR FUTURE GENERATIONS.
AND IT IS ABOUT STRENGTHENING THE CONTINUING DEMAND FOR:
TRUTH. JUSTICE. ACCOUNTABILITY.
THE PROJECT WILL LAUNCH ON
30 AUGUST
INTERNATIONAL DAY OF THE VICTIMS
OF ENFORCED DISAPPEARANCES.
ONE PERSON. ONE STORY. ONE RECORD.
UNTIL THERE ARE ANSWERS,
WE WILL KEEP ASKING:
WHERE ARE THEY?




A.M.L லம்பேட்

மக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் (Mecca Joint Defence Agreement) சவுதி அரேபியா, பாகிஸ்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையில் அண்மையில் கையெழுத்திடப்பட்ட முக்கியமான கூட்டுப் பாதுகாப்பு (Collective Defence) தொடர்பான ஒப்பந்தமாகும் .இது மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவின் மாறிவரும் பிராந்திய பாதுகாப்புக் கட்டமைப்பில் (Regional Security Architecture) முக்கியமான மாற்றத்தை பிரதிபலிக்கிறது. ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக எந்தவொரு குறிப்பிட்ட நாட்டையும் சவாலுக்குட்படுத்தவில்லை. மாறாக, Mutual Defence Strategic Coordination மற்றும் Defence-Industrial Cooperation ஆகியவற்றை வலுப்படுத்துவதே அதன் அடிப்படை நோக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளது.



மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் நிலையற்ற தன்மை(Geopolitical Instability), ஈரான்-இஸ்ரேல் மோதல், (Iran-Israel) செங்கடல் (Red Sea) பாதுகாப்பு நெருக்கடி மற்றும் வெளிப்புற பாதுகாப்பு உத்தரவாதங்கள் மீதான நம்பிக்கையின் மாற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

சவுதி அரேபியா நீண்டகாலமாக அமெரிக்கா உள்ளிட்ட வெளிப்புற சக்திகளுடன் பாதுகாப்பு உறவுகளைப் பேணி வந்துள்ளது. பாகிஸ்தானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் நீண்டகால Defence Partnership உள்ளது. அதேவேளை, நேட்டோவின் முக்கிய ஆளணிவள பங்காளரான துருக்கி தனது இராணுவ, தொழில்நுட்ப மற்றும் இராஜதந்திர திறன்களை இந்த அமைப்பில் இணைக்கிறது.

இதனால், இந்த ஒப்பந்தம் வெளிப்புற சக்திகளை மட்டுமே சார்ந்திருப்பதை குறைத்து மூலோபாயத் தன்னாட்சியை (Strategic Autonomy) அதிகரிக்கும் முயற்சியாக பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் எகிப்து(Egypt) போன்ற நாடுகளும் இதில் இணையக்கூடும் என துருக்கி தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தை நேரடியா துருக்கி அதிகாரபூர்வமாக இந்த ஒப்பந்தம் வேறு எந்த குறிப்பிட்ட நாட்டையும் இலக்காகக் கொண்டதல்ல என்று தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த ஒப்பந்தம் உருவான மூலோபாயச் சூழல் (Strategic Environment) ஈரான்-இஸ்ரேல், (Iran-Israel) USA மற்றும் பிராந்தியத்தில் ஈரான் (Iran)உடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்களுக்கு இடையிலான பதற்றங்களால் ஆழமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, Houthis மற்றும் Red Sea பாதுகாப்பு பிரச்சினைகளும் பிராந்திய பாதுகாப்புச் சூழலில் முக்கியமானவை. ஆனால் ஒப்பந்தம் ஹூத்திஸ் (Houthis), குர்திஸ்தான Kurdish movements அல்லது Baloch separatist groups ஆகியவற்றை அதிகாரபூர்வ எதிரிகளாக குறிப்பிடவில்லை. எனவே அவற்றை ஒப்பந்தத்தின் நேரடி இலக்குகளாக அல்லாமல் விரிவான பிராந்திய பாதுகாப்புச் சூழலின் (Wider Regional Security Context) ஒரு பகுதியாகப் பார்க்க வேண்டும். மேலும் ஒவ்வொரு தரப்பினருடனான நோக்கு என்பது வெவ்வேறு தலைப்புகளின் கீழ் ஆராயபட வேண்டியதாகும்

இந்தியா ஏன் கவலைப்பட வேண்டும் என்றால் இந்தியாவிற்கு மிகமுக்கியமான அம்சம் பாகிஸ்தானின் வலுப்பெறும் மூலோபாய நிலை (Pakistan's Enhanced Strategic Position) ஆகும்.

பாகிஸ்தான் ஏற்கனவே இந்தியாவின் முக்கியமான இராணுவப் போட்டியாளராக உள்ளது. இந்நிலையில் சவுதி அரேபியா (Saudi Arabia) மற்றும் துருக்கி (Türkiye) ஆகிய இரு முக்கிய நாடுகளுடனும் பாகிஸ்தான் தனது பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர தொடர்புகளை வலுப்படுத்துவது புதுடெல்லிக்கு(New Delhi) புதிய மூலோபாயச் சவாலை (Strategic Challenge) உருவாக்கலாம்.

இந்தியாவின் கவலை சவுதி அரேபியா (Saudi Arabia) குறித்து நேரடியாக அல்ல. மாறாக, South Asia-Gulf-Mediterranean strategic connectivity மூலம் பாகிஸ்தானை மையமாகக் கொண்ட விரிவான பாதுகாப்பு வலையமைப்பு உருவாகும் சாத்தியமே முக்கியமானது.

இதன் விளைவாக இந்தியாவின் இந்து சமுத்திர பாதுகாப்பு (Indian Ocean Security) Arabian Sea, Energy Security மற்றும் Pakistan Policy ஆகியவற்றில் புதிய மூலோபாய கணக்கீடுகள்; வகுப்புகள் தேவை.

இந்தியா- சவுதி அரேபியா, துருக்கி (India-Saudi Arabia, Türkiye) மற்றும் Israel உறவுகள் தொடர்பில் ஆராயும் போது

இந்தியா- சவுதி அரேபியாவுக்கிடையிலான உறவு மிகவும் முக்கியமானது. Energy Security Trade, Investment,Economic Diplomacy மற்றும் Indian Diaspora ஆகியவை இரு நாடுகளையும் நெருக்கமாக இணைக்கின்றன.

அதேவேளை, இந்தியா-துருக்கி இடையிலான உறவுகள் பாகிஸ்தான் தொடர்பான அங்காராவின்(Ankara) வின் நிலைப்பாடுகளால் சிக்கலானதாக உள்ளன. இந்தியா-இஸ்ரேல் உறவு Defence Technology, Security Cooperation மற்றும் Strategic Partnership ஆகிய துறைகளில் முக்கியமானது.



எனினும் இந்தியாவின் மேற்கு ஆசிய கொள்கை வகுப்பானது (West Asia policy) பொதுவாக மூலோபாய சமநிலை (Strategic Balancing) அடிப்படையில் அமைந்துள்ளது. -இஸ்ரேல்,சவுதி அரேபியா,ஈரான், ஐக்கிய அமீரக குடியரசு உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் ஒரே நேரத்தில் உறவுகளைப் பேணுவது இந்தியாவின் முக்கியமான இராஜதந்திர அணுகுமுறையாகும்.

மேலும் சீனா(China) இந்த மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தினுடைய (Mecca Defence Agreement) உறுப்பினர் அல்ல. எனினும் சீனா வை முற்றிலும் புறக்கணிக்க முடியாது.

பாகிஸ்தான் (Pakistan)- சீனா (China) இடையே ஆழமான Strategic Partnership உள்ளது. சவுதி அரேபியாவும் சீனாவுடன் பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை விரிவுபடுத்தி வருகிறது. துருக்கி மற்றும் சீனா இடையில் முக்கியமான பொருளாதார உறவுகள் உள்ளன.

எனவே, இந்த சீனா ஒப்பந்தத்தின் நேரடி உருவாக்குநர் என்று கூற முடியாது. ஆனால் இது உருவாக்கும் பலதுருவ பிராந்திய ஒழுங்கு (Multipolar Regional Order ) பீஜிங்கிற்கு (Beijing) கூடுதல் மூலோபாய இடத்தை வழங்கக்கூடும்.

எனவே, மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தம் (Mecca Defence Agreement) கூட்டு பாதுகாப்பு(Collective Defence), Strategic Autonomy மற்றும் Diversified Security Partnerships ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய பிராந்திய பாதுகாப்புக் கட்டமைப்பின் உருவாக்கத்தில் உள்ளது.

இதில் இந்தியாவிற்கான முக்கிய கவலை, பாகிஸ்தான், சவுதி அரேபியா, துருக்கி ஆகிய நாடுகளுக் கிடையிலான வளர்ந்து வரும் Strategic Connectivity ஆகும்.

இதற்கு இந்தியா , சவுதி அரேபியா மற்றும் மத்திய கிழக்கு(Gulf) நாடுகளுடனான Strategic Engagement-ஐ ஆழப்படுத்துதல், Israel மற்றும் Iran ஆகிய இரு நாடுகளுடனும் சமநிலையான உறவுகளைப் பேணுதல், Indian Ocean partnerships-ஐ வலுப்படுத்துதல் மற்றும் China-Pakistan-Gulf strategic nexus-ஐ தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவை புதுடெல்லியின்(New Delhi) முக்கியமான மூலோபாய முன்னுரிமைகளாக இருக்க வேண்டும்.

இதனால் (மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தம்)Mecca Agreement ஒரு சாதாரண defence pact tpl> US-centred regional order-இலிருந்து Multipolar Middle Eastern Security Order நோக்கி நகரும் மாற்றத்தின் ஒரு முக்கிய அறிகுறியாக பார்க்கப்படலாம்.

• • •

## 17 ஆண்டுகளாகப் ... தொடர்ச்சி...

இராதாகிருஷ்ணனுடன் தமிழ்தேசிய கட்சிகள் சந்தித்த போதும் நிறுத்தப்பட்ட மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினர்.

2026 ஆகஸ்ட் 05,ல் இந்திய வெளியுறவு செயலாளர் விக்கிரம் மிஷ்ரி அவர்களை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சாணக்கியன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உயிப்பினர் கோடீஸ்வரன் சந்தித்து அதிகாரப்பகிர்வு, மாகாணசபை தேர்தல் சம்மந்தமாக கலந்துரையாடினர்.

2026,ஆகஷ்ட், 20, ல்,இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்களுக்கும், யாழ்மாவட்ட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இதில் குறிப்பிட்ட பொதுவான சந்திப்புக்களுக்கு அப்பால் தனித்தனியாகவும் தமிழ்தேசிய கட்சி பிரமுகர்கள் இந்திய அரசின் இராஜதந்திரிகளுடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர், அனைத்துமே விடை தெரியாத கேள்விகளுடனே இன்றுவரை தொடர்கிறது.

ஈழத்தமிழர்களின் இணைந்த வடகிழக்கில் உரிமை, சுதந்திரம், சமஷ்டி அடிப்படையிலானதீர்வு, எதுவுமே பூச்சியமான வடநிலையில் தற்போது தனிஈழம் கேட்டு போராடிய தமிழர்கள் மாகாணசபை தேர்தலை கேட்டு போராடு ம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே வரலாற்று உண்மை.

• • •

## விடை தெரியாத... தொடர்ச்சி...

கண்டுபிடிக்கப்பட்டவர்கள் வெளிநாட்டிலிருந்து மூவரும், யாழ்ப்பாணம் (4), திருகோணமலை, அனுராதபுரம் (1), கம்பஹா (2), மட்டக்களப்பு (3), மற்றும் களுத்துறை, அம்பாந்தோட்டை, வவுனியா, குருநாகல், மாத்தறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டாலும், அவர்களின் தனியுரிமையைக் காரணம் காட்டி குடும்பத்தினரைத் தவிர வெளிநபர்களுக்கு விபரங்கள் தரப்படமாட்டாது என்று மறுக்கப்படுவதில் வெளிப்படைத்தன்மை கேள்விக்குள்ளாகின்றது.

மேலும், 5,427 குடும்பங்களுக்கு 200,000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன், 2,719 காணாமல் போனமைக்கான சான்றிதழ்களும் 409 இறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன என்று பெருமிதமாக கூறும் அலுவலகம் தாய்மார்களுக்குத்தேவை வெறும் இழப்பீடோ, உளச்சமூக நிவாரணமோ, அஸ்வசும மற்றும் வாழ்வாதார உதவிப் பொதிகளோ அல்ல. 'என் பிள்ளைக்கு என்ன நடந்தது, அவனைக் கடத்திய குற்றவாளிகள் யார்?' என்ற உண்மையே என்பதை இன்னமும் புரிந்திருக்கவில்லை.

இதேநேரம், நாடளாவிய ரீதியில் கண்டறியப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் விவகாரத்திலும் அரசாங்கத்தின் அணுகுமுறை சந்தேகத்திற்குரியதாகும். செம்மணி மனிதப் புதைகுழி 3 கட்டங்களாக சுமார் 110 நாட்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று, 584 மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக இதுவரை 57 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும்அடுத்த கட்டங்களுக்குத் தேவையான நிதியை அரசு வழங்கும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

ஆனால், கண்டெடுக்கப்பட்ட எச்சங்களின் மரபணு சோதனைகளும் தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கைகளும் தாமதிக்கப்பட்டுக்கொண்டே போகின்றன. மேலும், கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரண தண்டனை கைகதியாக உள்ள லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, செம்மணி புதைகுழி தொடர்பில் சாட்சியமளிக்கத் தயார் எனக் கூறிய நிலவரத்தில், அவரை காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலக பிரதிநிதிகள் சிறையில் சென்று சந்தித்தபோதிலும், 'இரகசியத்தன்மையைப் பேண வேண்டும்' என்ற போர்வையில் பேசுபொருட்களை மூடிமறைப்பது சந்தேகங்களை மேலும் தீவிரப்படுத்துகிறது. இலங்கையின் உள்நாட்டு நீதிக்கட்டமைப்புகளும் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் போன்ற பொறிமுறைகளும் அரசாங்கத்தின் குற்றங்களை மறைக்கும் கருவிகளாகவே செயல்படுகின்றன என்பதை வரலாறு உணர்த்துகிறது.

இத்தகைய சூழலில், இலங்கையில் நிகழ்ந்தேறிய வலிந்து காணாமலாக்கப்படுதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையின் அவசியமும் சர்வதேச மனித உரிமைகள் கட்டமைப்புக்களின் தலையீடும் இன்றியமையாததாகிறது. அர்ஜென்டினாவில் 1970களில் நடைபெற்ற 'அழுக்கு யுத்தத்தின்' (Dirty War) போது காணாமலாக்கப்பட்ட தங்கள் பிள்ளைகளுக்காகப் போராடிய 'பிளாசா டி மாயோ தாய்மார்கள்' (Mothers of the Plaza de Mayo) அமைப்பின் இடைவிடாத போராட்டமாகட்டும், அல்லது குவாத்தமாலா மற்றும் போஸ்னியாவில் இடம்பெற்ற மனிதப் புதைகுழி ஆய்வுகளாகட்டும் அவை அனைத்தும் உண்மையான நீதியை எட்டுவதற்கு சர்வதேச அளவிலான சுயாதீன நிபுணத்துவ விசாரணைகளும் தடயவியல் மரபணு சோதனைகளுமே வழிவகுத்தன.

இலங்கையிலும் அரசு இயந்திரமும் முப்படைகளும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நிலையில், ஒரு சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணை மூலமே நீதியை வெளிக்கொண்டுவர முடியும்.

அதேவேளை, நீதிக்கான இந்தப் நீண்ட போராட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தரப்பில் உள்ள அகநிலை பலவீனங்களையும் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமலாக்கப்பட்டவர்களின் அன்புக்குரியவர்களும், அவர்களது சங்கங்களும் பல்வேறு குழுக்களாகப் பிளவுபட்டு நிற்பது நீதிக்கான பயணத்தில் பாரிய தடையை ஏற்படுத்தியுள்ளது.

வேறு வேறு அமைப்புகளாகவும், அரசியல் நன்மைகளுக்காகவும் இப்போராட்டம் சிதறடிக்கப்படும் போது, அரசாங்கத்திற்கும் பேரினவாத அரசமைப்பிற்கும் அதுவே பெரும் சாதகமாக மாறுகிறது.

'நீதிக்கான நீள்பயணம்' எனும் மகுடத்தில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நாளையதினம் சர்வதேச மாநாடுகளும், கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதுகூட இரு அணிகளின் ஏற்பாட்டில் நடைபெறுகின்றன.

இந்த நிகழ்வுகளில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதிகள் பங்கேற்றாலும், பாதிக்கப்பட்ட தாய்மார்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு, உறுதியான ஒரே குரலாக சர்வதேசத்தின் கதவுகளைத் தட்டாத வரை, அரசாங்கங்கள் வழங்கும் போலி வாக்குறுதிகளையும் அடக்குமுறைகளையும் முறியடிப்பது கடினமானதாகும்.

2026 ஆம் ஆண்டின் வலிந்து காணாமலாக்கப்படுதல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தின் உலகளாவிய மகுட வாசகமான 'பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலிடம்; இப்போதே நடவடிக்கை எடுங்கள்' (Victims first. Actions now) என்பதற்கேற்ப, இலங்கை அரசு வெறும் சட்டம், நிதி ஒதுக்கீடு மற்றும் இழப்பீட்டுப் பொதிகளைக்காட்டி ஏமாற்றாமல் உண்மையான நீதியை வழங்க முன்வர வேண்டும்.

அரசுகள் மாறினாலும் பேரினவாத அரசு இயந்திரத்தின் மனோபாவம் மாறவில்லை என்பதை யாழ்.மாவட்ட செயகலகத்தின் வாசலில் தாய்மார்கள் மீது நடத்தப்பட்ட பொலிஸ் தாக்குதல்கள் நிரூபித்துள்ளன.

எனவே, உள்நாட்டு பொறிமுறைகள் முற்றிலும் செயலிழந்துவிட்ட நிலையில், சுயாதீனமான சர்வதேச விசாரணையொன்றின் மூலமே உண்மையையும் நீதியையும் கண்டடைய முடியும் என்பதும், அதற்கு பாதிக்கப்பட்ட மக்களின் பிளவற்ற ஒன்றுபட்ட போராட்டமே முதன்மைச் சக்தியாக இருக்கும் என்பதும் தெளிவாகிறது. இதனை அன்புக்குரியவர்களுக்காக போரடுபவர்களும், அவர்களை இயக்குபவர்களும் உணராதவரையில் நீதிக்கான பயணம் நீண்டதாகவே இருக்கும்.

• • •

## ஈழத்தமிழர்களைக் ... தொடர்ச்சி...

காணி உரிமைகள் பாதிக்கப்படக்கூடும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக ஐ.நா. இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரே பிரன்ஞ்ஞை சந்தித்து விளக்கமளித்த அவர், ஈழத்தமிழரை கைவிட்டதுபோல் மலையகத் தமிழரையும் ஐ.நா. கைவிடக்கூடாது என வலியுறுத்தியுள்ளார்.

## வறண்ட வலயங்களில் ... தொடர்ச்சி...

தற்போதைய தரவுகளின்படி, யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில பகுதிகளிலும் கல்பிட்டியாவிலும், மழைக்காலத்தில் பதிவான அதிகபட்ச நிலத்தடி நீர் மட்டத்துடன் ஒப்பிடுகையில் 70 முதல் 80 சதவீதம் வரை சரிவு ஏற்பட்டுள்ளது. எனினும், இது மொத்த நிலத்தடி நீர் வளம் அதே அளவில் குறைந்துவிட்டதைக் குறிக்காது என அவர் தெளிவு படுத்தினார்.

அதேவேளை, கட்டுப்பாடற்ற முறையில் நிலத்தடி நீரை அதிகளவில் உறிஞ்சுவது நீர்மட்டத்தை மேலும் பாதிக்கக்கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். நாடு முழுவதும் சுமார் 1,600 கண்காணிப்புப் புள்ளிகள் மூலம் நிலத்தடி நீர் மட்டம் கண்காணிக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

## நேபாளம்-சீன எல்லைப்... தொடர்ச்சி...

கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகக் கருதப்பட்ட பின்னர் மீட்புப் பணிகள் மீண்டும் தொடங்கின. பெய்ஜிங்கிலிருந்து செய்தி வழங்கும் அல் ஜசீராவின் கத்ரீனா யூ, சீன அதிகாரிகள் ஆபத்து குறைந்திருப்பதாகத் தெரிகிறது, ஆனால் அது முற்றிலுமாக நீங்கிவிடவில்லை என்று கூறுவதாகத் தெரிவித்தார்.

## ஈரானிய ஏற்றுமதி... தொடர்ச்சி...

கூறியது.

தடைகள் மற்றும் ஈரானிய துறைமுகங்களின் முற்றுகையின் காரணமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கிட்டத்தட்ட 35 சதவீதம் சரிந்துள்ளதாக அதிபர் மசூத் பெஷெஷ்கியன் அரசு ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இருப்பினும், ஜூன் மாதம் வாஷிங்டனுடன் கையெழுத்திடப்பட்ட குறுகிய கால புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MoU) போது, எண்ணெய் விற்பனைக்குச் சுருக்கமாக அனுமதி அளிக்கப்பட்டிருந்த நிலையில், ஈரான் சுமார் 90 மில்லியன் பீப்பாய் எண்ணெயை விற்க முடிந்தது என்றும் அவர் கூறினார்.

பிப்ரவரி 28 அன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் போரைத் தொடங்கிய தாக்குதலில் அவரது தந்தை அயதுல்லா அலி கமெனி கொல்லப்பட்டார். அன்று முதல் பொதுவெளியில் தோன்றாத உச்ச தலைவர் அயதுல்லா மொஜ்தபா கமெனி, இந்த இன்னல்களைச் சமாளிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

"பணவீக்கம், வேலையின்மை, விலைகளை நிர்வகித்தல் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான சந்தை போன்ற பொருளாதாரம் மற்றும் வாழ்வாதார சவால்களின் சங்கிலியை தீவிரமாக கவனிக்க வேண்டிய அவசியம் உள்ளது," என்று கமெனி கூறியதாகக் கூறப்படும் ஒரு எழுத்துப்பூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீதிபதிகளின் ஓய்வு ... தொடர்ச்சி...

முன்னதாக, நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் குறித்த ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் மார்கரெட் சட்டர்த்வைட் (Margaret satterthwaite) அனுப்பிய கடிதத்தில், பதவி வகிக்கும் நீதிபதிகளுக்கு இம்மாற்றங்களைப் பயன்படுத்துவது நீதித்துறை சுதந்திரம் மற்றும் அதிகாரப் பகிர்வைப் பாதிக்கும் என்று கவலை வெளியிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள அரசாங்கம், குறிப்பிட்ட சில நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் நோக்கத்திலோ அல்லது நீதித்துறையின் அமைப்பை உடனடியாக மாற்றும் நோக்கத்திலோ இந்தச் சட்டமூலங்கள் கொண்டுவரப்படவில்லை என்று தெரி வித்துள்ளது.

நீதிமன்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் நிலையில், அனுபவமிக்க நீதிபதிகளைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதற்காகவே தற்போதைய நீதிபதிகளுக்கும் ஓய்வுபெறும் வயது உயர்வு பொருந்தும் வகையில் செய்யப்பட்டுள்ளதாக அரசு நியாயப்படுத்தியுள்ளது.

இந்த மாற்றங்கள் மூலம் நிறைவேற்று அதிகாரம் நீதித்துறை நடவடிக்கைகளில் தலையிட முடியாது என்பதால், இது சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளுக்கு உட்பட்டே அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்தச் சட்டமூலங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உயர்நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அரசாங்கம், உயர் நீதிமன்றம் வழங்கும் எந்தவொரு தீர்ப்பையும் முழுமையாக மதிப்பதாகத் தெரிவித்துள்ளதோடு, நீதித்துறை சுதந்திரத்தைப் பேணத் தொடர்ந்து உறுதியளிப்பதாகவும் ஐ.நா.விடம் குறிப்பிட்டுள்ளது.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் ... தொடர்ச்சி...

மீண்டும் தொடங்கும் பேச்சுவார்த்தைகள், ஆர்க்டிக் பாதுகாப்பு குறித்த பதட்டங்கள் உட்பட, அதிகரித்து வரும் பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் அழுத்தங்களை எதிர்கொள்ள ஐஸ்லாந்துக்கு உதவும் என்று அரசாங்கம் வாதிட்டது.

இதற்குப் பதிலாக, இணைப்பை எதிர்ப்பவர்கள், ஐஸ்லாந்தின் மீன்பிடி நீர்ப்பரப்பு களைப் பாதுகாப்பதிலும், அந்நாடு அந்த அமைப்பின் ஒரு பகுதியாக மாறினால் எழக்கூடிய பொதுவான இறையாண்மை தொடர்பான பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தினர்.

இந்த பொது வாக்கெடுப்பு ஐஸ்லாந்து மக்களிடம் ஒரு எளிய கேள்வியைக் கேட்டது: ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்வதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க வேண்டுமா?

ஐஸ்லாந்து உண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர வேண்டுமா என்பது குறித்த வாக்கெடுப்பு இதுவல்ல. 'ஆம்' என்ற முடிவு, பிரஸ்ஸல்ஸுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க அரசாங்கத்திற்கு அனுமதி அளித்திருக்கும். உறுப்பினர் சேர்க்கை குறித்த எந்தவொரு இறுதி ஒப்பந்தமும் பின்னர் மற்றொரு பொது வாக்கெடுப்பில் வாக்காளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்.

2009-ல், தனது பொருளாதாரத்தை கடுமையாகப் பாதித்த ஒரு நிதி நெருக்கடியைத் தொடர்ந்து, ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர விண்ணப்பித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தை எதிர்க்கும் ஒரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு, 2013-ல் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டன.

தொழில்நுட்ப ரீதியாக, பொது வாக்கெடுப்பின் முடிவு சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தாது, ஆனால் சமூக ஜனநாயகப் பிரதமர் கிறிஸ்ட்ரூன் ஃப்ரோஸ்டாடோட்டிர் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் அந்த முடிவை மதிக்க உறுதியளித்துள்ளது.

## நெதன்யாகுவின் ... தொடர்ச்சி...


யாயிர் நெதன்யாகு, அப்பகுதியை உடனடியாக விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டதாக நியூஸ்மேக்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அவர் தனது தனிப்பட்ட உடைமைகளை எடுத்துச் செல்லாமல் அங்கிருந்து புறப்பட்டு, நேரடியாக இஸ்ரேலுக்குத் திரும்பினார்.

நெதன்யாகுவின் மூத்த மகன் பல ஆண்டுகளாக புளோரிடாவில் வசித்து வருகிறார். அங்கு அவரது "சொல்லப்படும் ஆடம்பரமான வாழ்க்கை முறையும், அவருக்கு வழங்கப்பட்ட அரசு நிதியுதவிப் பாதுகாப்பும் இஸ்ரேலில் பொதுமக்களின் கவனத்தை மீண்டும் மீண்டும் ஈர்த்தன" என்று தி டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் செய்தி வெளியிட்டுள்ளது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .







**இ.ஜோயல்**
செல்வநாயகபுரம்

## அப்பா ♥



விடியலுக்கு முன்னே எழும் விளக்கு நீதான் அப்பா,
வியர்வையில் குடும்பம் நனைய விடாத கூரை நீதான் அப்பா…
சம்பள கவரை பார்த்து கவலை மறைக்கும் வேடம் நீதான் அப்பா,
என் ஆசைக்காக கடைசி 100 ரூபாயும் கொடுக்கும் கடவுள் நீதான் அப்பா.

திட்டும் போது கோவம் வரும்,
ஆனா அந்த திட்டுக்குள்ள வாழ்க்கை ஒளிஞ்சிருக்கும்…
விழுந்தா தூக்கி விட மாட்டேன்னு சொல்லுவ,
ஆனா தூரத்துல இருந்து கை கொடுக்க தயாரா நிப்ப…

உன் தோள் தான் என் முதல் சைக்கிள்,
உன் வார்த்தை தான் என் முதல் பாடம்.
நீ சாப்பிடாம எனக்கு ஊட்டி விட்ட சோறுல தான்,
இன்னைக்கு நான் இவ்ளோ பெரிவளாய் நிக்கிறேன்.

அப்பா னு ஒரு வார்த்தை போதும்,
உலகமே பாதுகாப்பா தெரியும்.

**ம.துலக்சனா**
விளாங்குளம்

## கூடா நட்பு கேடு தரும்

ஒரு ஊரில் அருண் என்ற சிறுவன் இருந்தான். அவன் நன்றாக படிப்பவன். அப்பாவிற்கு வேலை இடமாற்றம் செய்யப்பட்டதால் புதிய பாடசாலையிற்கு வந்து சேர்ந்தான். அந்தப் பள்ளியில் அவனுடைய சக மாணவர்கள் சில தவறான பழக்கவழக்கங்களை கொண்டவர்கள். வகுப்பு பாட நேரத்தை வீணடிப்பது, சின்ன சின்ன சண்டைகள், கேலிகள் மற்றும் போதைப்பொருள் பழக்கம் என அவர்கள் செய்யும் தவறுக்கு அருணையும் இழுத்தார்கள்.

முதலில் “ஒரே ஒரு தடவை” என்று ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக படிப்பை விட்டான். பழக்கவழக்கங்கள் மாறின. தந்தை , தாய் எவ்வளவு கூறிய போதும் அவர்கள் அடித்தபோது கூட அவன் அந்த நண்பர்களோடு சேருவதை கைவிடவில்லை.

ஒருநாள் காவல் நிலையம் செல்லும் அளவிற்கு பெரிய பிரச்சினையில் மாட்டிகொண்டார்கள். அப்போது அந்த நண்பர்கள் எல்லாம் ஓடி விட்டார்கள். தனியாக மாட்டிக்கொண்ட அருண் செய்வதறியாது திகைத்தான். பின்னர் அவன் செய்த குற்றத்திற்காக சிறு காலம் தண்டனை அனுபவித்து வீடு திரும்பினான்.

வீட்டில் அப்பா சொன்னார்: “மகனே, நல்லவனாக இருந்தாலும் கெட்டவர்களோடு சேர்ந்தால் கெட்ட பெயர் தான் வரும். கூடா நட்பு கேடு தரும்.” அப்பொழுது தான் அவனுக்கு புரிந்தது, இதற்காகத்தான் அன்று எல்லோரும் என்னை கண்டித்தனர் என்று.

பின்னர், அன்றிலிருந்து அருண் நல்ல நண்பர்களை தேர்ந்தெடுத்து மீண்டும் படிக்க ஆரம்பித்து , சுய தொழிலதிபராக முன்னேறினான்.
ஆகவே நாம் எப்பொழுதும் நல்ல நட்பை தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

**சு.திகழினி**
கன்னியா

## பேனாவின் சிந்தை..



பாலர் வகுப்பில் ஆசிரியரின் மாணவனே..
பென்சிலை மறந்தாயே பேனாவை எடுத்தாயே!
பேனாவும் பேசுகிறது.
தன் கதையை கூறுகிறது..

மையினால் மனதமைத்து
பிளாஸ்டிக்கால் உடலமைத்து
இரும்பால் கண்ணமைத்து
அழகு பார்த்தீர் என்னை..

என்னிலும் எத்தனை வகை
அட்லஸ் என்றோ ஸ்பீட் என்றோ
பெயர்ப் பொருத்தம் நானறியேன்.
உங்களுக்கும் சாதியமைத்தீர்
எனக்குள்ளும் ஏன் அமைத்தீர்..

மாணவனுக்கு நீலம்
ஆசிரியருக்கு சிவப்பு
அலுவலருக்கு ஊதா
அதிலும் தான் எத்தனை பாகுபாடு..

பரீட்சைக்கும் எனை எடுத்தீர்
அறியா மொழியெல்லாம் எழுதித் தீர்த்தீர்.
ஆங்கிலப் பாடம் வந்தாலோ
என் பாடு திண்டாட்டம் தான்

காதல் மொழி வரையவும் எனை எடுத்தீர்
வசை கவி பாடவும் எனை எடுத்தீர்
தலை சொறியவும் எனை எடுத்தீர்
நான் பேச மாட்டேன் என்ற தைரியத்தில்..

என் மையெல்லம் தீர்த்தீர் - எனை
குப்பைத் தொட்டிக்குள் போட்டீர்.
என் மையெல்லாம் வற்றி கண்ணீர் விடவும் சக்தியற்றவனாய்
எனை ஆக்கினீர்..

நானும் உயிர் வாழ்ந்திருப்பேன்.
உங்களைப் போல் பச்சோந்தியாய் மாறியிருந்தால்….



**ஹப்ஸா கீவில்**
பாலையூற்று

# தாயகமும் வாழ்வும்

